Registered as a news paper.

பக்கங்கள்: பதினான்கு

விலை ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 02 திருவள்ளுவர் ஆண்டு : 2035 புரட்டாதி 12 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷஃபான் 12 (28.09.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:362

FedEx. Express

விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள் கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்

THIRUMURUGAN COM NET

Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com

46, ஆடியபாதம் வீதி,
திரு நெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 75..
Fax:021 222 731.

## மனித உரிமை ஆணைக் குழுவின்

# யாழ். அலுவலக அதிகாரிகள் மீது பொலிஸ் நிலையத்தில் தாக்குதல்!



ருவான் சந்திரசேகர



எம்.பி.இசற்.பாருஸ்

(யாழ்ப்பாணம்)

**யாழ். மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான் சந்திரசேகர மற்றும் யாழ். மாவட்டத்துக்கான மனித உரிமைகள் பிரதிநிதி பற்றிக் உட்பட மனிதஉரிமை ஆணைக்குழுவின் அதிகாரிகள் மூவர் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் வைத்து பொலிஸாரால் தாக்கப்பட்டனர்.**

**நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –**

நல்லூரைச் சேர்ந்த ரட்ணம் என்பவரை யாழ். பொலிஸார் குற்றச்சாட்டொன்றின் பேரில் கைது செய்து தாக்கித் துன்புறுத்துவதாக உறவினர்கள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முறையிட்டிருந்தனர்.

இது குறித்து விசாரணைகளை நடத்துவதற்காக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான் சந்திரசேகர, விசாரணை அதிகாரி எம்.பி.இசற்.பாருஸ், மனித உரிமைகள் ஆலோசகரும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட அதிகாரியுமான பற்றிக் ஆகியோர் யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்றனர்.

ஆனால் குறிப்பிடப்பட்ட பெயரில் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்ததையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் திரும்பிச் செல்ல முற்பட்டபோது, பொலிஸ் நிலையத்தின் மாடிப் பகுதியில் யாரோ அலறும் சத்தம் கேட்டது. இதனையடுத்து அதிகாரிகள் செல்லமுற்பட்டபோது பொலிஸார் அனுமதி மறுத்தனர்.

இதனால் பொலிஸாருக்கும், மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளுக்குமிடையே முறுகல் நிலை தோன்றியது. (14 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய ஆலோசனை சபை ஒக்ரோபர் 4 இல் அமைப்பு!

(கொழும்பு)

சமாதானத்துக்கும் இணக்கப்பாட்டுக்குமான தேசிய ஆலோசனைசபையின் ஆரம்ப நிகழ்வு எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் இந்த ஆரம்ப வைபவம் நடைபெறவிருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தில் பங்குபற்றுமாறு மதத் தலைவர்கள், நாடாளுமன்றத்தை பிரதிநிதித் (14 ஆம் பக்கம் பார்க்க)

## வரதர் அணி உறுப்பினர் இணுவிலில் சுட்டுக்கொலை!

(இணுவில்)

இணுவில் பகுதியில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியைச் சேர்ந்த ஒருவர் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மானிப்பாயில் வசிப்பவரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையாருமான வல்லி சுந்தரம் (வயது 50) என்பவரே நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் மோட்டார் சைக்... அணியின் உறுப்பினராக இருந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி சார்பில் யாழ்.மாவட்டத்தில் இவர் போட்டியிட்டிருந்தார்.

வீட்டிலிருந்து புறப்பட்டு சுன்னாகம் பகுதியில் உள்ள தனது தொலைத்தொடர்பு நிலையத்துக்கு சென்றுகொண்டிருந்த சமயமே, வீதி

# புலிகளின் அரசியல் குழு இன்று ஐரோப்பா பயணம்!

## முக்கிய சந்திப்புக்களில் பங்கேற்பர்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. ... செல்வன் தலைமையில் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா. ...

இன்று காலை 11.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து ...

சோந்த ஒருவர் நேற்றுப் பிற்பகல் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மானிப்பாயில் வசிப்பவரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையாருமான வல்லி சுந்தரம் (வயது 50) என்பவரே நேற்றுப் பிற்பகல் 1.45 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் ஈ.பி.ஆர்.எல்.எவ்.வரதர் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி சார்பில் யாழ்.மாவட்டத்தில் இவர் போட்டியிட்டிருந்தார்.

வீட்டிலிருந்து புறப்பட்டு சுன்னாகம் பகுதியில் உள்ள தனது தொலைத்தொடர்பு நிலையத்துக்கு சென்றுகொண்டிருந்த சமயமே, வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இரு இளைஞர்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வே தூதரகம் முன் ஈ.பி.டி.பி ஆர்ப்பாட்டம்!



கொழும்பில்உள்ள நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாக ஈ.பி.டி.பியினர் நேற்றும் பிரேதப்பெட்டியுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த வியாழக்கிழமை கொழும்பு வெள்ளவத்தையில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ. பி.டி.பி. மத்திய குழு உறுப்பினர் சிங்கம் எனப்படும் சோமசுந்தரம் வர்ணகுலசிங்கத்தின் பிரேதப் பெட்டியை நோர்வேத் தூதரக வாசலில் வைத்து இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஏற்கனவே - ஈ.பி.டி.பியினர் இப்படியான நான்கு ஆர்ப்பாட்டங்களைக் கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரகம் முன்பாக நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று பல்வேறு நாடுகளின் தூதரகங்களின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக ஈ.பி.டி.பி கூறியிருந்தபோதும் (14 ஆம் பக்கம் பார்க்க)

# முக்கிய சந்திப்புக்களில் பங்கேற்பர்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்ட அரசியற் குழுவினர் இன்று ஐரோப்பாவுக்கான பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையில் காவல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உள்ளிட்ட குழுவினரே ஐரோப்பிய பயணத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

இன்று காலை 11.30 மணியளவில் கிளிநொச்சியிலிருந்து ஹெலிகொப்ரர் மூலம் கொழும்பு சென்று கட்டுநாயக்க விமான நிலையமூடாக ஐரோப்பாவுக்கு பயணமாகவுள்ளனர்.

இவர்கள் ஐரோப்பாவில் மூன்று வாரங்கள் தங்கியிருந்து முக்கிய (14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இடைக்கால தீர்வு வரைபுக்கமைய

# இனப்பிரச்சினையை தீர்க்காவிடின் இலங்கை இரண்டாகப் பிளவுபடும்!



## மிலிந்த மொறகொட எச்சரிக்கை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபுக்கு அமைவாக இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாவிட்டால், நாடு இரண்டாகப் பிரிவதைத்தடுக்க முடியாது என ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மிலிந்தமொறகொட தெரிவித்தார்.

நேற்று நாத்தாண்டியா பகுதியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது - (14 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# யாழ்.பல்கலைக்கழக விரிவுரைகள் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)

கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப்போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து, யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும் நேற்று திங்கட்கிழமை முதல் செயற்படத்தொடங்கின.

கடந்த முதலாம் திகதி முதல் நின்று போயிருந்த கலைப்பீட விரிவுரைகள் நேற்று முதல் வழமைக்குத் திரும்பியதை அவதானிக்க முடிந்தது. திட்டமிட்டபடி, கலைப்பீடப் பரீட்சைகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (31)

## விஞ்ஞானபீடம் நாளை ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட கல்விச்செயற்பாடுகள் அனைத்தும் நாளை ஆரம்பமாகும் என்று பதிவாளர் அறிவித்துள்ளார்.

# மொழிவிருத்திப் பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மொழிவிருத்திக்கான விசேட பயிற்சிப்பட்டறை இன்று காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடம்பெறவுள்ளது.

இந்தநிகழ்வில் - பிரதமவிருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கணிதத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ்.ஸ்ரீ சற்குணராஜாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதியும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தநிகழ்வில்- விழா வளஆளணியினர்களாக யாழ்.பல்கலைக்கழக ஆங்கிலத்துறையைச் சேர்ந்த ஸ்ரீ கதிர்காமநாதன். எஸ்.சுந்தரேஸ்வரன், வி.பரந்தாமன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# சுழிபுரம் விக்ரோறியாவில் இன்று நடமாடும் சேவை!

(சங்கானை)

சுழிபுரம் ஐக்கிய சங்க வித்தியாலயத்தில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவிருந்த வலி.மேற்கு பிரதேச செயலக நடமாடும் சேவை நிகழ்வு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பள்ளசுட்டி, வறுத்தோலை, கல்விளான், பாண்டவெட்டை, வீரவத்தை, திக்கரை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த பொதுமக்கள் தங்களின் தேசிய அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, திருமணம், வீடமைப்புக்கடன் பெறல், சமூகநலத் திட்டங்கள் சம்பந்தமான எந்தப் பிரச்சினைகளையும் அந்த இடத்திலேயே தீர்த்துவைப்பதற்கும், அன்றேல் அது சம்பந்தமான விளக்கங்களை அந்த இடத்திலேயே சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கவும் நடவடிக்கைககள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகப் பிரதேச செயலர் தெரிவித்தார். (48)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் தொழிற்திறனை மேம்படுத்துவது தொடர்பான முக்கிய கலந்துரையாடல் இன்று யாழ்.செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

நீர்ப் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் தொழிற்திறனை மேம்படுத்தும் நோக்கிலேயே இந்தக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 10 மணியளவில் செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் சகல அரச தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ள வேண்டும் என்றும், அவர்கள் அனைவரும் கலந்துகொண்டு பயிற்சிநெறி தொடர்பான தமது ஆலோசனைகளையும் தெரிவிக்க வேண்டும் என யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

## முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு மாணவர் ஒன்றியத்தின் முக்கிய கலந்துரையாடல் நாளை புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அகிலன் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது கல்விகற்றுக் கொண்டிருக்கும் முதலாம், இரண்டாம் வருட மாணவர்களையும் இதுவரை கற்கைநெறியைப் பூர்த்தி செய்யாத மாணவர்களையும் இந்தக்கூட்டத்துக்கு தவறாது சமுகம் தரும்படி விளையாட்டு விஞ்ஞான மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இதில், கற்கைநெறி சம்பந்தமாக முக்கிய விடயம் கலந்துரையாடப் படவிருப்பது குறிப்பிடத்தக்கது.


## சிறு விளம்பரம்

### முகமதி கிறைண்டிங் மில்

ஆட்டாமா, வறுத்தமா, சிவப்பு அரிசி மா, வறுத்த வெள்ளை அரிசி மா, வெள்ளை அரிசி மா, கடலை மா, குரக்கன் மா, கோதுமை குறுணல் ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முகமதி கிறைண்டிங் மில் அன் ஸ்ரோர்ஸ், இல 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். (C/3022)


# மரண அறிவித்தல்



## திருமதி.நாகேஸ்வரி சிவானந்தம்

மாசியப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி.நாகேஸ்வரி சிவானந்தம் கடந்த 27.09.2004 அன்று காலமாகிவிட்டார். அன்னார் சிவானந்தத்தின் பாசமிகு மனைவியும், திருக்குமார் (லண்டன்), தர்சினி, காலஞ்சென்ற சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் உதயரஞ்சன் (அவர்ணா வெதுப்பகம் - சண்டிலிப்பாய்) ஆகியோரின் மாமியாரும், நல்லையா, கண்ணம்மா, கந்தசாமி (மல்லாவி), ஆகியோரின் அருமைச் சகோதரியும், துஷ்யந்தன், சிந்துஜா, அபர்ணா, கேதுஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.09.04 ஆம் திகதி இன்று 12 மணியளவில் கொட்டுப்பனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய். (C/3201)

தகவல்
குடும்பத்தினர்.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ்.இந்துவில் சித்தியடைந்தோர்!

கடந்த மாதம் நடைபெற்ற 5 ஆம் தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் 102 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். 219 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர்.

இந்தப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரம் வருமாறு :

இ.பிரணவன் - 182, வி.ரமணன்- 170, க.துவாரகன் - 169, ந.லவலோஜன் - 169, வி.நிரூகன் - 169, ஸ்ரீ. இனோசா - 166, இ.பார்த்தீபன் - 165, ந.அமிழ்தினி - 165, இ.வினு- 164, சோ.வெண்ணிலவன் - 163, பு. லதுசா - 161, மு.விதுன் - 160, ச. குருபரன் - 159, க.லக்ஷஜன் - 159, பே.கபில்ராஜ் - 159, பா.லிசி - 156, லி.நந்தவர்மன் - 155, ப.சாஸ்வதன்- 154, வெ.கரிகரன் - 154, க.குருபரன்- 152, க.நிசாந்தினி - 150, ஆ.கஜேந்தினி - 150, ஆ.கஜேந்திரன் - 147, ந.பிருந்தா - 146, ப.சதீஸ்குமார் - 146, ஸ்ரீ.சிறிவிந்துஜன் - 146, சி.நிவேதிகா - 146, சி.ஷம்யா - 145, யோ.நிரோஷன்யூட் - 145, தி.விக்னேஸ்வரன் - 145, ர.பிரியதர்சன் - 144, சி.சிவராஜி - 144, ப.ஆதிரை - 143, ப.வைத்தீஸ்வரசர்மா - 143, ஜெ.ஜனுசன் - 143, ந.காயத்திரி - 143, ஆ. கஜனி - 143, ஜெ.பிருந்தாபன் - 142, த.மதீஷன் - 141, ப.கஜமாலன் - 141, த.பூங்குழலி - 141, ச.நிகிந்தா- 141, சி.சயானி - 141, உ.கேதுஷன்- 140, பா.திலக்சன் - 140, தி.கோகுலன் - 140, கு.ஐங்கரன் - 140, ஜெ.டிலானி - 140, ஸ்ரீ.அபிராமி - 140, ச.அபிரா - 139, ஸ்ரீ.விஜிதரன் - 138, க.யதுஷன் - 138, வ.மைதிலி - 138, ந.விதுசன் - 137, பு.ரஸ்மி - 137, இ.யவானீசன் - 136, ப.தீபிகா - 136, ர.செந்தூரன் - 135, கு.தேனுசா - 135, க.பிரசாந் - 135, ப.நேர்த்திகா- 135, உ.ரிசிகேசினி - 134, த.தனுசியந்தினி - 134, ம.கார்த்திகா - 134, வெ. பிருந்தன் - 134, க.சரவணன்- 134, ச.காருண்யா - 134, கௌ.யாதனா - 134, சு.கௌசி - 133, வ.புருஷோர்த் - 132, கு.கனிஸ்டன் - 132, ந.செந்தூரன் - 131, தி.கிரிசாந் - 131, சி. சஜீவன் - 131, ம.தர்மிகா - 131, இ.சஞ்சிகா - 131, சி.கௌரிசங்கர்- 130, ம.கிரிஜன் - 130, யோ.சர்வதன்- 130, சி.திவ்வியபிரசாத் - 130, ர. ரணீஷன் - 130, ஜெ.ஜெரூஷன் - 129, இ.செங்கோடன் - 128, யு.காயத்திரி - 128, இ.ஜெயசுமங்களா - 128, ர.ரவிக்குமார் - 128, சி.துஸ்சயந் - 128, கோ.குகரூபன் - 128, ஜெ.சங் கீர்த்தனன் - 128, இ.குகன்ராஜ் - 128, யோ.கிருஸ்ணிகா - 127, கி. நிவேதிகா - 127, சி.மயூரன் - 127, ச.தவேதிகா - 127, ம.நிரோசன் -126, வீ.அபிராமி - 126, வீ.கஜநிதன் - 126, ர.மதுரந்தன் - 125, தி.சிவஜீவன் - 125, சி.விஜிதரன் - 125, சி.விதுரன் - 125, பா. முரளீதரன் - 124, ம.தமிழினி - 124.ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக்கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998-05-19ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 1997-02-17ஆம் திகதி 963/1 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக் கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிச்சாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

☆ இதற்கமைய இக்கூட்டங்களிற்கு சமூகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

☆ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமூகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (1/4) பங்கினர் அல்லது 25பேர் எது குறைவோ அத்தொகையாகும்.

☆ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச் சபையிலிருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார் இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பாட்டவராக இருத்தல் வேண்டும்.

☆ சபையிலிருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் 09 பேருக்கு மேற்படின், தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்ளுவார்.

☆ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

☆ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையிற் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

## கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான விபரம்

| இல. | கிளை பெயர் | தவிசாளர் பெயர் | காலம் திகதி | நேரம் மணி | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|---|---|
| 01 | அல்வாய் தெற்குA | திரு.செ.திருச்செல்வம் | 02.10.2004 | மு.ப.10 | யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் அல்வாய் |
| 02 | அல். தெற்கு மத்தி | செல்வி. இ.இராசரத்தினம் | 02.10.2004 | மு.ப.10 | யா/ அல்வாய் அம்பாள் வித்தியாலயம் அல்வாய் |
| 03. | கட்டைவேலி | திரு.பாலச்சந்திரன் | 02.10.2004 | மு.ப.10 | கிளைக்கட்டட மண்டபம். |
| 04. | கல்வத்தை | திருமதி வை.சுகன்யா | 02.10.2004 | மு.ப.10 | கிளைக்கட்டட மண்டபம் |
| 05. | கனுவில் | திருமதி செ. அழகேந்திரராசா | 02.10.2004 | மு.ப.10 | யா/ திரு இருதய கல்லூரி ஆரம்ப பாடசாலை கரவெட்டி |
| 06. | கரவெட்டி மேற்கு | திரு.சு. கனேசு | 02.10.2004 | மு.ப.10 | யா/ திரு இருதய கல்லூரி வதிரி கரவெட்டி. |
| 07. | கரவெட்டி கிழக்கு | திரு.ஐ.நாகேஸ்வரன் | 02.10.2004 | மு.ப.10 | கிளை அயல் மண்டபம். |
| 08 | கோவிற்கடவை | திரு.சோ.குமாரவேல் | 02.10.2004 | மு.ப.10 | யா/ ஞானாசாரியார் கல்லூரி கரவெட்டி. |
| 09. | நெல்லியடி | திரு.கு. அருந்தவநாதன் | 02.10.2004 | மு.ப.10 | யா/ நெல்லியடி ம.ம. வித்தியாலயம் கரவெட்டி |
| 10. | நுகவில் | செல்வி.ரி.தவலீலா | 02.10.2004 | மு.ப.10 | யா/ விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி. |
| 11. | சந்திரா | செல்வி. கே.ஜெயசுதா | 02.10.2004 | மு.ப.10 | நாமகள் சனசமூக நிலையம் கர. கிழக்கு கரவெட்டி. |
| 12. | சண்டில் | திரு.க.குகதாசன் | 02.10.2004 | மு.ப.10 | கிளைக்கட்டட மண்டபம். |
| 13. | துன்னாலை தெற்கு | திரு.த.செல்வசோதி | 02.10.2004 | மு.ப.10 | கிளைக்கட்டட மண்டபம். |
| 14. | கிளான் | திரு.ஆர். விஜயமோகனராசா | 02.10.2004 | மு.ப.10 | யா/ யாழ். துன்னாலை தெற்கு அ.த.க.பா. கரவெட்டி. |
| 15. | வதிரி | செல்வி. பா.கிருஷ்ண பவானி | 02.10.2004 | மு.ப.10 | யா/ யாழ். நெல்லியடி மெ.மி.த.க.பா. கரவெட்டி. |
| 16. | யார்க்கரை | திரு.ரி.என். ராஜா | 02.10.2004 | மு.ப.10 | யா/ யார்க்கரு விநாயகர் வித்தியாலயம் கரவெட்டி. |
| 19. | துன்னாலை வடக்குA | திரு.பொ. மோகன் | 02.10.2004 | மு.ப.10 | வல்லியானந்தம் பா. பாடசாலை துன்னாலை கரவெட்டி. |
| 20. | துன்னாலை வடக்குB | திருமதி பா. கலைச்செல்வி | 02.10.2004 | மு.ப.10 | யா/ காசிநாதர் வித்தியாலயம் துன்னாலை கரவெட்டி. |
| 21. | அல்வாய் தெற்குB | திருமதி அ. ஜெகநாதன் | 02.10.2004 | மு.ப.10 | மனோகரா பாலர் பாடசாலை மண்டபம் அல்வாய். |
| 23. | கிழவிதோட்டம் | திரு.வை. கைலைநாதன் | 02.10.2004 | மு.ப.10 | கவுந்தில் சனசமூக நிலையம் கரவெட்டி. |
| 24. | இராசக்கிராமம் | திரு.பி. சிவகுமார் | 02.10.2004 | மு.ப.10 | இராசர் கிராமம் சனசமூக நிலையம் கரவெட்டி. |
| 25. | வதிரி வடக்கு | திரு.கே.திலகேந்திரன் | 02.10.2004 | மு.ப.10 | வதிரி தமிழ் மன்றம் அல்வாய். |
| 30. | அல்லையம்பதி | திரு.எஸ்.சபாரட்ணம் | 02.10.2004 | மு.ப.10 | அல்லையம்பதி பா.பாடசாலை துன்னாலை. கரவெட்டி. |

கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை,
857, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
16.09.2004. (சி/3175)

செ.கனகசபாபதி.
கூ.அ.உ.ஆ யாழ்.மாவட்டம்

# அரசாங்கத்துடன் இணையுமாறு ஹெல உறுமயவிடம் கோரிக்கை!

## லண்டனில் சந்திரிகா விடுத்தார்



(கொழும்பு)

தமது அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளுமாறு ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர்களிடம் ஜனாதிபதி சந்திரிகா லண்டனில் வைத்துக் கோரிக்கை விடுத்திருப்பதாக, கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா. கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியூயோர்க் சென்றிருந்தார். இவர் அங்கிருந்து கடந்த சனிக்கிழமை நாடு திரும்பினார். நாடு திரும்பும் வழியில் லண்டனில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கிங்ஸ்பிறிட்ஜ் பகுதியிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கினார். இங்கு தங்கியிருந்தபோது, லண்டனில் - ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர்களான பிக்குகள் நால்வர் தங்கியிருப்பதாக அவருக்குத் தகவல் கிடைத்தது.

பீரிஸ் சர்வதேச பௌத்த நிலையத்தின் பிரதம குரு வண. பரவ கௌர சந்திரரத்ன தேரோவின் 50 ஆவது வயது பூர்த்திவிழாவை



யொட்டி லண்டனில் நடைபெற்ற பூஜையில் கலந்துகொள் ளவே, ஹெல உறுமய பிக்குகள் லண்டன் சென்றிருந்தனர்.

வண. எல்லாவெல மெத்தாணந்த தேரர், வண. உடுவே தம்மலோக தேரர், வண. கொட்டகொட அமரகிட்டி தேரர், வண. உடுவே நந்த தேரர் ஆகியோரே லண்டனில் தங்கியிருப்பதாகச் செய்தி கிடைத்தவுடன், தொலைபேசி மூலம் ஜனாதிபதி கிங்ஸ்பெரி விகாரையுடன் தொடர்புகொண்டார்.

வண. உடுவே தம்மலோக தேரருடன் தொலைபேசியில் பேசியபோதே ஜனாதிபதி சந்திரிகா, தனது அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தார்.

ஆனால், உடுவே தம்மலோக தேரர் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், நாட்டுக்குப் பயன்தரக்கூடிய விடயங்களுக்கே ஆதரவளிப்பதாகவும் உறுதியளித்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# கொழும்பு நகர் விடுதிகளில் பொலிஸார் பெரும் தேடுதல்!

(கொழும்பு)

கொழும்பிலுள்ள சுமார் நூற்றுக்கும் அதிகமான விடுதிகளில் கடந்த வியாழக்கிழமையன்று பொலிஸார் தேடுதல் நடத்தினர்.

அண்மையில் கொழும்பில் நடந்த கொலைகளின் சூத்திரதாரிகள், கொழும்பிலுள்ள விடுதிகளில தங்கியிருப்பதாக கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையிலேயே இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, மருதானை, புறக்கோட்டை, பம்பலப்பிட்டி ஆகிய பகுதிகளில் உள்ள விடுதிகளில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அங்கு சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாததுடன் ஆயுதங்கள் எதுவும் மீட்கப்படவில்லை.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்வதற்காக விடுதியொன்றில் தங்கியிருந்த 61 பங்களாதேஷ் நாட்டவர்கள் மட்டும் விடுதி ஒன்றில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

அண்மைக்காலமாக கொழும்பில் இடம்பெற்றுவரும் படுகொலைச சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள், விடுதிகளில் தங்கியிருப்பதாகத தமக்குக் கிடைத்த தகவலையடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக, பிரதிப் பொலிஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமையன்று வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து ஈ.பி.டி.பி .உறுப்பினரான வர்ண குலசிங்கம் என்பவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டரை வருடங்களுக்கு முன்பு புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பின்னர் நடத்தப்பட்ட முதலாவது பாரிய தேடுதல் வேட்டை இதுவாகும்.

# இந்தியாவிலுள்ள அகதிகள் திரும்ப சரியான சூழ்நிலை ஏற்படவில்லை!

## ஐ.நா பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய நிலைமைகளை வைத்து இந்தியாவில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தமது நாட்டுக்கு திரும்பிச் செல்வது அவ்வளவு உகந்ததாக அமையவில்லையென ஐ.நா நம்புவதாக, இந்தியாவுக்கான ஐ.நா அகதிகள் அமைப்பு அதிகாரியான லென்னாட் கொட்சலாலியன் தெரிவித்தார்.

சென்னை பல்கலைக்கழகத்தில் நடந்த நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது - எங்களது கருத்துப்படி பெரும்பான்மையான அகதிகள், இலங்கையில் சாதாரண நிலைமைகள் இருந்தால் திரும்பிப்போக உள்ளனர். ஆனால் தற்போது சிறியளவிலான தொகையினரே மீளத் திரும்பிச்செல்லவுள்ளனர்.

எனவே, இவர்கள் திரும்பிச் செல்வதுகூட தற்போது பாதிக்கப்பட்டுவிட்டது. 12 ஆயிரம் அகதிகள் தமது சொந்த, இடம் திரும்புவதற்கு இலங்கை அரசாங்கம் உதவிகளைச் செய்தது.

இந்தியாவில் தங்கியுள்ள தமிழ் அகதிகள் தமது சொந்த இடம் திரும்பிச் செல்வதற்கு அங்கு இதுவரை சரியான சூழல் ஏற்படவில்லையென அவர் தெரிவித்தார்.

## நாடாளுமன்ற உறுப்பினர்களின்

# சர்வதேச கூட்டத்தில் பங்கேற்க இலங்கைக்குழு இன்று புறப்படும்

(கொழும்பு)

ஜெனிவாவில் நடைபெறும் சர்வதேச நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுக்கூட்டத்தில் பங்கேற்பதற்காக, சபாநாயகர் உட்பட்ட குழுவினர் இன்று சுவிற்ஸர்லாந்திற்குப் பயணமாகவுள்ளனர்.

சபாநாயகர் டபிள்யூ.ஜே.பி. லொக்குபண்டாரவின் தலைமையில் - அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் முத்து சிவலிங்கம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.டி.மகேஸ்வரன் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் குமார ஆகியோர் சர்வதேச நாடாளுமன்றக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக ஜெனீவா செல்லவுள்ளனர்.

இந்த மாநாடு நான்கு நாட்களுக்கு நடைபெறவுள்ளது. இந்த மாநாடு 'மனித உரிமைகள் காப்பும், பயங்கரவாதமும் என்ற தொனிப்பொருளில் இடம்பெறும்

# பெருவிரல் அடையாளம் கடவுச்சீட்டில் பதியப்படும்!

(கொழும்பு)

கடவுச்சீட்டுக்களில் பெருவிரல் அடையாளத்தை பதிவுசெய்யும் நடைமுறை அமுல் படுத்தப்பட விருப்பதாக குடிவரவு, குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் ஆர்.ரி.தர்மரட்ண தெரிவித்தார்.

கடவுச் சீட்டுக்களில் இடம்பெற்றுவரும் ஆள் அடையாள மோசடிகளைத் தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படு கிறது.

மிக நுட்பமான தொழில்நுட் பத்தை உபயோகித்து வெற்றுக் கண்ணுக்கு தென்படாத வகையில் இவை பதிவுசெய்யப்படும்.

அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 24 மணிநேரத்துக்குள் கடவுச்சீட்டு விநியோகிக்கும் திட்டம் நிறுத்தப்பட்டு 3 நாட்களுக்குள் விநியோகிக்கும் திட்டம் அமுலீ படுத்தப்படவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இடைக்கால நிர்வாக யோசனைப்படி அரசு பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும்

## முஸ்லிம் உரிமைகள் பாதுகாப்புக் குழுச் செயலாளர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு, ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கவேண்டும் என வடமாகாண முஸ்லீம் உரிமைகள் பாதுகாப்புக் குழுச் செயலாளர் மௌலவி சுபியான் தெரிவித்தார்.

செய்தி ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் விரைவில் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்குமாறு கோரவுள்ளோம்.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வை, தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களின் மூலமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருப்பதை, நியூயோர்க்கில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்கூட்டத்தின் போது ஜனாதிபதி ஆற்றிய உரை தெளிவுபடுத்துகிறது.

ஜனாதிபதி இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாக வைத்து சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்கின்றபோதும் அவருடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பினர் இந்த விடயத்தில் ஜனாதிபதியை செயற்பட அனுமதிக்கவில்லை. அத்துடன் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாக கையாளப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஜனாதிபதியின் கைகளிலேயே உண்டு.

சமாதானப் பேச்சுக்கள் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் ஆரம்பிக்கப்படுவதை ஆதரிப்பதாகவும் தெரிவித்த சுபையான், தாம் வெளிநாட்டுத் தூதுவர்களைச் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்குமாறு அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்குமாறு கோரிக்கை விடவுள்ளதாகவும் தெரிவித்தார்.

# புலிகளின் பயிற்சி வீடியோ கசற்றுடன் சென்னையில் ஒருவர் கைதானார்!

(சென்னை)

விடுதலைப்புலிகள் பயிற்சி பெறும் காட்சிகள் அடங்கிய பல வீடியோ கசட்டுகளை, இலங்கையிலிருந்து கொண்டுசென்ற ஒருவர் சென்னை விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

இவை தமிழ் நாட்டிலுள்ள தீவிரவாதிகளுக்காக கொண்டுவரப்பட்டதா அல்லது இந்தியாவில் வேறு மாநிலங்களில் செயற்பட்டுவரும் தீவிரவாத அமைப்புக்களுக்காக கொண்டுவரப்பட்டதா என்பது குறித்து, மத்திய மாநில உளவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

இதுகுறித்துப் பொலிஸார் மேலும் தகவல் வெளியிடுகையில் -

தமிழகத்தைச் சேர்ந்த பலர் இன்றும் மறைமுகமாக விடுதலைப் புலிகளுக்கு பலவழிகளில் உதவி புரிகின்றனர். வெளிநாட்டிலிருந்த விடுதலைப் புலிகளுக்கு வரும் ஆயுதங்களை இந்தியா வழியாகக் கடத்துதல், இராமநாதபுரம் உள்ளிட்ட சில மாவட்டங்களிலிருந்து டீசல், மருத்துவப் பொருட்கள் ஆகியவற்றைக் கடத்துதல் போன்ற பல விடயங்களுக்குத் தமிழ் நாட்டிலுள்ள சிலர் விடுதலைப் புலிகளின் முகவர்களாக செயற்பட்டுவருகின்றனர்.

வேதாரண்யம், இராமேஸ்வரம் உள்ளிட்ட சில கடற்கரைப் பகுதிகளில் இந்த கடத்தல் சம்பவங்கள் அதிகரிக்கவே, கடலோரக் காவற்படை உசார்படுத்தப்பட்டு, விடுதலைப் புலிகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டது.

இருப்பினும் இன்றுவரை அது முற்றிலும் கட்டுப்படுத்தப்படவில்லை.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து விமானம் மூலம் சென்னை வந்து சேர்ந்த ஒரு நபரை, விமான நிலைய அதிகாரி கள் சோதனையிட்டபோது, அவரிடம் 7 வீடியோக் கசற்றுகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த வீடியோ கசட்டுக்களில் சந்தேகம் கொண்ட அதிகாரிகள் அவற்றைப் பார்த்தபோது, அந்தக் கசட்டில் விடுதலைப் புலிகள் இலங்கையில் பல்வேறு இடங்களில் எடுத்துவரும் போர்ப்பயிற்சி, பேட்டி ஆகியவை பதிவுசெய்யப்பட்டிருந்தன.

இதனால் அதிர்ச்சியடைந்த அந்த அதிகாரிகள் உடனடியாக உள்ளூர் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். எனினும் தடைசெய்யப்பட்ட இயக்கம் தொடர்பான விவகாரம் என்பதால், விடுதலைப் புலிகளின் இந்தக் கசட் குறித்து விசாரணை செய்வதற்காக கியூ பிராஞ் பொலிஸார் பார்வையிட்டுச் சோதனை செய்தனர்.

விடுதலைப் புலிகள் குறித்த அந்தக் கசட்டை கொண்டு வந்த நபரிடம் விசாரணை நடத்தினர்.

விசாரணையின்போது கொழும்பு விமான நிலையத்தில் தன்னைச் சந்தித்த ஒருவர் இவற்றை சென்னையின் புறநகரில் உள்ள ஒரு முகவரியில் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

உடனடியாக குறித்த முகவரைத் தொடர்புகொண்டபோது - அங்கு குடியிருந்த இலங்கையர்கள் இதனை வரவழைத்திருந்தமை தெரியவந்தது. அவர்களிடம் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற எனப் பொலிஸ் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# திருமண நிகழ்வில் குண்டுப்புரளி மகிந்த, ரணில் வெளியேற்றம்!



(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் இடம்பெற்ற பிரதியமைச்சர் ஒருவரின் வீட்டுத் திருமணத்தில் குண்டுப் புரளி பரப்பப்பட்டதால் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் அங்கிருந்து பாதுகாபபு அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது :

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் உள்ள பிரதி அமைச்சர் ஒருவர் தனது மகளின் திருமணத்திற்கு முக்கிய அரசியல்வாதிகள் பலரையும் அழைத்திருந்தார். இது நட்சத்திர விடுதியொன்றில் நடைபெற்றது. அந்தத் திரு மண வைபவத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பிரமுகர்களும் அரசியல் பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, திடீரென அநாமதேய தொலைபேசி மூலம், இந்த விடுதியில் குண்டு வைக்கப்பட்டிருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டதையடுத்து, பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பாதுகாப்பு அதிகாரிகளால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர்.

அத்துடன், மேலும் பல முக்கியஸ்தர்கள் குண்டுப் புரளியை அடுத்து திருமண விழாவிலிருந்து வெளியேறினர். எனினும், முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் மட்டுமே இறுதி வரை அந்தத் திருமண நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# வலிமை மிக்கதொரு அணியாக மேற்கிந்தியத்தீவுகள் உருவாகும்

## அணித்தலைவர் லாரா தெரிவிப்பு



(லண்டன்)

மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியதன்மூலம் மேற்கிந்தியத் தீவுகள் அணி வலிமை மிக்க அணியாக உருவெடுக்கும் என்று கப்டன் லாரா கூறியுள்ளார்.

மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி மேற்கிந்தியத் தீவுகள் அணி ஐ.சி.சி கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த வெற்றி குறித்து கப்டன் லாரா கூறியதாவது-

இங்கிலாந்தை வீழ்த்தி மேற்கிந்தியத் தீவுகள் இமாலய வெற்றியைப் பெற்றுள்ளது. இந்த வெற்றி மூலம் சர்வதேச கிரிக்கெட்டில் மேலும் சாதனை நிகழ்த்த முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

1975 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்று தனது பயணத்தைத் தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி வலிமை மிக்க அணியாகத் திகழ்ந்தது. அதே போல் தற்போது மினி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருப்பதன் மூலம் எமது அணி மீண்டும் வலிமை மிகுந்த அணியாக உருவெடுக்கும்.

இங்கிலாந்துக்கு எதிராக சமீபத்தில் ஆடிய 8 டெஸ்ட் போட்டிகளில் 7 போட்டிகளில் தோல்வியைச் சந்தித்துள்ளோம். இந்தத் தோல்விகளை மினி உலகக் கிண்ண வெற்றி மூலம் சமன்செய்து விட்டோம் என நினைக்கிறேன்.

9 ஆவது விக்கெட்டுக்காக இணைந்து சிறப்பாக ஆடிய பிரௌனி - பிராட்ஷா ஜோடியைப் பாராட்டுகிறேன். இது அணியின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த வெற்றியாகும்.

71 ஓட்டங்களை குவித்த பிரௌனி - பிராட்ஷா ஜோடியை கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் பாராட்ட வேண்டும் என நினைக்கிறேன். பிராட்ஷா வலைப் பயிற்சியில் ஈடுபடும்போது கூட இந்தமாதிரி சிறப்பாக ஆடியதை நான் பார்த்ததில்லை என லாரா கூறினார்.

தோல்வி குறித்து இங்கிலாந்து கப்டன் வோகன் கூறியதாவது -

கடைசிவரை நிலைத்து நின்று ஆடிய பிரௌனி - பிராட்ஷா ஜோடியைப் பாராட்டுகிறேன். ட்ரெஸ்கோதிக் சிறப்பாக ஆடி சதம் அடித்ததுடன், அணி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையை எட்ட உதவினார்.

பிரௌனி - பிராட்ஷா ஜோடி 8 விக்கெட்டுக்கள் வீழ்ந்த போதிலும் துல்லியமாக பந்தை எதிர்கொண்டு ஆடி ஆட்டத்தின் போக்கையே மாற்றியமைத்து விட்டனர்.

சூரிய வெளிச்சம் குறைவாக இருந்த நிலையிலும் 90 மைல் வேகத்தில் வந்த பந்தைக்கூட இந்த ஜோடி நம்பிக்கையுடன் எதிர்கொண்டு ஆடியது பாராட்டுதலுக் குரியதாகும் என மைக்கல் வோகன் கூறினார்.

# சீன ஓபன் ரெனிஸ்; செரீனா சம்பியன்!



சீன ஓபன் ரெனிஸ் போட்டியின் இறுதியாட்டத்தில் ரஷ்ய வீராங்கனை சுவெட்லானாவை வீழ்த்தி செரீனா வில்லியம்ஸ் சம்பியன் பட்டத்தை வென்றார்.

சீன ஓபன் ரெனிஸ் போட்டி சீன தலைநகர் பீஜிங்கில் நடந்தது. இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ரஷ்ய வீராங்கனை சுவெட்லானாவை எதிர்த்து விளையாடினார்.

பரபரப்பாக நடந்த இந்த ஆட்டத்தின் முதல் செட்டை சுவெட்லானா தனதாக்கிக் கொண்டார். முதல் செட்டை கோட்டைவிட்ட செரீனா 2 ஆவது செட்டில் சுதாகரித்துக் கொண்டு ஆடினார். இதனால் அவர் 2 ஆவது செட்டை கடுமையான போராட்டத்துக்குப் பின்னர் கைப்பற்றினார்.

சம்பியன் யார் என்பதை நிர்ணயிக்கும் 3 ஆவது செட் பரபரப்புடன் நடந்தது. இதை செரீனா கைப்பற்றினார். இதில் செரீனா 4-6, 7-5, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை தட்டிச்சென்றார்.

### உதைபந்தாட்ட சம்மேளனம்

# அடுத்த வருட போட்டிகளை முன்கூட்டியே நடத்த முடிவு!

ஜுரிச் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் விளையாடும் வீரர்களுக்கு போதுமான ஓய்வை அளிக்கும் விதமாக 2006 ஆம் ஆண்டின் பல்வேறு போட்டிகளை முன்னதாகவே நடத்த சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் தீர்மானித்துள்ளது.

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி ஜேர்மனியில் 2006 ஆம் ஆண்டு ஜுன் 9 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது.

இதையடுத்து அந்த ஆண்டு நடைபெறவுள்ள லீக் மற்றும் போட்டிகள் அனைத்தையும் மே 14 ஆம் திகதிக்குள் நடத்த சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் தீர்மானித்துள்ளது. மே 14 ஆம் திகதிக்குப் பிறகு 8 தினங்கள் வீரர்களுக்கு முழுவதுமாக ஓய்வு கொடுத்துவிட்டு, 23 ஆம் திகதி முதல் ஜுன் 8 ஆம் திகதிவரை உலகக் கிண்ணத்துக்கான பயிற்சி ஆட்டம் உட்பட அணியைத் தயார் செய்யும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து யுஇஃப்ஏ கிண்ண சம்பியன் லீக் போட்டிகளும் ஒரு வாரம் முன்னதாகவே நடைபெறவுள்ளன. அதன்படி யுஇஃப்ஏ கிண்ண இறுதியாட்டம் மே 17 ஆம் திகதியும், சம்பியன் லீக் ஆட்டம் ஆம் 24 ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

# இந்திய அணி எதிர்கொள்ளும் தோல்விக்கு மன்னிப்பே கிடையாது

## கங்கூலி தெரிவிப்பு





இந்திய அணி சந்தித்துவரும் தோல்விக்கு மன்னிப்புக் கிடையாது என கங்கூலி தெரிவித்துள்ளார். அவுஸ்ரேலியாவுடன நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டிக்காக கொல்கத்தா மைதானத்தில் கங்கூலி தீவிர பயிற்சியில் ஈடுபட்டுள்ளார். உடற்பயிற்சிக் கூடத்தில் பெரும்பகுதியை செலவிட்ட அவர், அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சாதிப்போம் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில் - இதுவரை கிடைத்த தோல்விகளுக்கு எந்தக் காரணம் கூறினாலும் சரியாகாது. என்னைப் பொறுத்தவரை தோல்விக்கு மன்னிப்பே கிடையாது.

இந்திய அணிமீது ஏற்பட்டுள்ள களங்கத்தை துடைக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றார். இதேவேளை, அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இந்திய வீரர்கள் சிறப்பாக ஆடவேண்டும் என்ற நோக்கில் பெங்களூரில் பயிற்சி ஆட்டம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆட்டம் இன்று நடைபெறுகிறது.

# இந்திய துடுப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த புதிய திட்டமுள்ளதாம்

## ஷேன் வோன் தெரிவிப்பு



இந்தியத் துடுப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்த புதிய திட்டங்கள் வைத்துள்ளேன் என்று அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் கூறியுள்ளார்.

அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்துள்ளது. இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 6 ஆம் திகதி பெங்களூரில் நடைபெறவுள்ளது. முன்னதாக அவுஸ்ரேலிய அணி மும்பையில் நடக்கும் 3 நாள் போட்டியில் மோதவுள்ளது.

இந்த நிலையில் அவுஸ்ரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோன் நிருபர்களிடம் கூறுகையில் -

இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் சுழற்பந்து வீச்சை எதிர்கொள்வதில் வல்லவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் அவர்களை சமாளிக்க புதிய திட்டங்கள் வைத்துள்ளேன். என்னுடைய பந்துவீச்சில் பல மாற்றங்கள் செய்யத் திட்டமிட்டிருக்கிறேன். நடக்கவிருக்கும் டெஸ்ட் போட்டியின் போது இதைப் பார்க்கலாம்.

கடந்த 98 மற்றும் 2001 ஆம் ஆண்டு இந்திய பயணத்தின்போது நான் காயத்தால் அவதிப்பட்டேன். ஆனால் இம்முறை எனக்கு போதிய ஓய்வு கிடைத்துள்ளது. எனவே என்னுடைய முழுத் திறமையையும் நிரூபிக்கவுள்ளேன் என்றார்.

# நெடியகாடு பொன்விழா கேடயத்தை டயமன்ஸ் கழகம் தனதாக்கியது!

(யாழ்ப்பாணம்)

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் டயமன்ஸ் கழகம், மணற்காடு சென் அன்ரனிஸ் கழகத்தை தோற்கடித்து கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

நேற்றுமுன்தினம் மின்னொளியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் இடைவேளைக்கு முன்னதாக டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்கு மூன்று கோணர் வாய்ப்பு கிடைத்தும் சரியான முறையில் அதனை பயன்படுத்தத் தவறிவிட்டனர்.

ஆட்டம் தொடங்கி 16 ஆவது நிமிடத்தில் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக வீரன் கியூட்டினால் அடிக்கப்பட்ட பந்து கோல் கம்பத்தில் பட்டுத் திரும்பியதும், அதே அணி வீரன் இருதயராஜா மிக அற்புதமாக அந்தப் பந்தைக் கோலாக்கினார்.

இடைவேளையின் போது சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் 1-0 என முன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின் ஆட்டம் தொடர்ந்த போது முதல் 06 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணிக்கு கிடைத்த கோணரை அவ்வணி வீரரான தர்மேந்திராவினால் அடிக்கப்பட்ட போது அவ்வணி வீரர் பிரியாங்கன் மிக அற்புதமாக கோலாக்கினார். இதனால் இரு அணிகளும் 1-1 என்ற சமநிலையில் இருந்தன.

அதன் பின்னர் 18 ஆவது நிமிடத்தில் டயமன்ஸ் அணித் தலைவரான அரவிந்தனால் மிகவும் நேர்த்தியான கோல் ஒன்று அடிக்கப்பட்டது.

இதனால் டயமன்ஸ் விளையாட்டுக்கழகம் சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை 2-1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது.

இதில் சிறந்த விளையாட்டு வீரனாகவும் சிறந்த கோல் காப்பாளராகவும் டயமன்ஸ் அணி வீரர்களான கே.அரவிந்தன், எம்.ஜேம்ஸ் கொலிங்ரன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

3 ஆம் இடத்திற்கான போட்டியில் சிவானந்தா விளையாட்டுக் கழகமும், கலட்டி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் தண்டனை உதைமூலம் கலட்டிஅணி சிவானந்தா அணியை 6:5 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து 3 ஆம் இடத்தை பெற்றது.

(12)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையேயான வலய மட்டத்திலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி அடுத்தமாதம் 7 ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இந்தப் போட்டிகளில் 16 வயதுப் பிரிவில் 20 பாடசாலைகளும், 18 வயதுப் பிரிவில் 12 பாடசாலைகளும் பங்குபற்றுகின்றன.

போட்டிகள் யாவும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானம் மற்றும் டயமன்ஸ் பொம்மர்ஸ் ஆகிய விளையாட்டு மைதானங்களில் ஒக்ரோபர் 7 ஆம் திகதி தொடக்கம் 11 ஆம் திகதிவரை 5 நாட்கள் நடைபெறவுள் ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போட்டிகள் யாவும் சர்வதேச உதைபந்தாட்ட விதிகளுக்கு அமைவாகவும், வலயக் கல்வி அலுவலக சுற்றறிக்கைக்கு அமைவாகவும் நடைபெறும் என உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் தெரிவித்தார்.

போட்டிகள் யாவும் புதிய நேரம் 2.30 மணிக்கு ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

(122)

# லைட் ஹெவி குத்துச்சண்டையில் கிளென் ஜான்சன் சம்பியனானார்!



லைட் ஹெவி வெய்ட் குத்துச்சண்டைப் போட்டியில் ஜமேக்கா வீரர் கிளென் ஜான்சன் சம்பியன் பட்டம் பெற்றார். அமெரிக்காவின் மெம்பிஸ் நகரில் சர்வதேச குத்துச்சண்டை கூட்டமைப்பு நடத்திய லைட் ஹெவி வெயிட் குத்துச்சண்டைப் போட்டிகள் கடந்த சனிக்கிழமை நடைபெற்றன.

இதில் ஜமேக்கா வீரர் கிளென் ஜான்சன், அமெரிக்காவின் ராய் ஜோன்ஸ் பட்டத்தைக் குறிவைத்துக் களமிறங்கினர். ஒன்பது சுற்றுக்கள் முடிவில்- ராய் ஜோன்சை வீழ்த்தி கிளென் ஜான்சன் சம்பியன் பட்டத்தைத் தக்கவைத்துக் கொண்டார்.

கடந்த முறை இங்கிலாந்தின் ஷபீல்ட் நகரில் நடந்த இந்தப் போட்டியிலும் இவரே சம்பியன் பட்டம் வென்றார். இவரை எதிர்த்து ஆடிய ராய் ஜோன்ஸ் குத்துச்சண்டையில் இதுவரை 49 முறை வெற்றிபெற்றிருக்கிறார். இந்தப் பிரிவில் அவர் சந்திக்கும் மூன்றாவது தோல்வி இதுவாகும்.

## சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை - கிழக்கு ஜன சக்தி சனசமூக நிலையமும், கிராம நல் லொழுக்க சிக்கன கடன்வழங் கும் சங்கமும் இணைந்து சமூக மேம்பாட்டு அறிவியல் கருத்தரங்கு ஒன்றை இன்று பிற்பகல் நிலைய மண்டபத்தில் நடாத்தவுள்ளன.

நிலையத் தலைவர் த.செல்வ ராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில், தமிழர் புனர்வாழ் வுக் கழகத் திட்ட இணைப்பாளர் ஜெயராசா, நிகொட் நிறுவன திட்ட இணைப்பாளர் கெங்காதரன், ஓய்வு பெற்ற சங்கானைக் கோட்டக் கல் விப் பணிப்பாளர் சி.செல்லையா, வலி.மேற்குப் பிரதேசசபை செயலா ளர் திருமதி பு.சிவலிங்கம், சேவா லங்கா மன்ற மாவட்டப் பணிப் பாளர் ஆனந்தராசா மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிர்வாக உத்தி யோகத்தர் ஆகியோர் பங்குபற்றிக் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேச செயல கத்திற்குட்பட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கான கூட்டம் நாளை மறு தினம் காலை 10 மணிக்கு சாவ கச்சேரி இந்துக்கல்லூரியில் நடை பெறவுள்ளது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பங்கு கொள்ளும் சகல திணைக்களங்களினதும், சங்கங் களினதும் பொறுப்பதிகாரிகளை தமது நிறுவனம் தொடர்பான கணக்கறிக்கையைச் சமர்ப்பிக்கு மாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

- பாடசாலைகளுக்கிடையிலான -

# உதைபந்தாட்டப் போட்டியில் நடுவர் நையப்புடைப்பு!

- அருணோதயக் கல்லூரி மைதானத்தில் சம்பவம்

உதைபந்தாட்டப் போட்டியின் நடுவரொருவர் பாடசாலையொன்றின் பழைய மாணவர்களால், மோசமாகத் தாக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அளவெட்டி அருணோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வலி காம கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் போதே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, தெல்லிப்பளையைச் சேர்ந்த இரு பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி யானது, மிகவும் விறுவிறுப்பாக நடபெற்றுக்கொண்டிருந்தது. போட்டி முடிவுறும் நிலையில் இரு அணி களுமே தலா ஒரு கோலைப் பெற் றிருந்தமையால், போட்டியின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக 'பனால்டி' முறை பயன்படுத்தப்பட்டது.

இதன்போது சந்தர்ப்பத்தை சரி யாக பயன்படுத்திய ஒரு கல்லூரி, நான்கு கோல்களைப் போட்டு வெற்றி யீட்டியது. மற்றைய கல்லூரியால் இரு கோல்களையே போடமுடிந் தது. இந்த நிலையில் போட்டி முடி வுற்று வீரர்கள், நடுவர்கள் மைதா னத்தை விட்டு வெளியேறியபோது, மைதானத்தினுள் உள்நுழைந்த தோல்வி யுற்ற பாடசாலையின் பழையமாண வர்கள் நடுவ ரின் தீர்ப்புக்களில் தவறு இருப்பதாகக் கூறி, அவரை மோச மாகத் தாக்கியதுடன் அவதூறாகவும் திட்டினர்.

பழைய மாணவர்களின் தாக்கு தல்களில் இருந்து நடுவரைக் காப் பற்றிய ஆசிரியர்கள் சிலர், அவரை அறையொன்றினுள் பாதுகாப்பாக பூட்டி வைத்திருந்தனர். பின்னர் இது தொடர்பாக தெல்லிப்பளை அரசியற் துறையிலே முறைப்பாடு செய்யப் பட்டபின், சம்பவ இடத்துக்கு வருகை தந்த தெல்லிப்பளை அரசியற்துறை பொறுப்பாளர் இ.சரவணன் இரு பகுதி யினரையும் சமரசம் செய்து வைத்தார்.

வருடாவருடம் இந்த இரு பாட சாலைகளுக்குமிடையிலான விளை யாட்டுப் போட்டிகளின் போது, பழைய மாணவர்கள் அணி பிரிந்து மோதுவது என்பது வழமையாகி விட்டதென விளையாட்டுத்துறை அவதானிகள் சுட்டிக்காட்டினர். இந்தநிலை விளையாட்டு வீரர்களின் கௌரவத்துக்கு இழுக்காகும் என வும், எந்தப் பிரச்சினைகளையும் உரிய முறையிலேயே அணுகவேண்டும் எனவும் அவர்கள் மேலும் தெரி வித்தனர். (94)

## வீரவணக்கக் கூட்டம்

பரந்தன் பகுதியில் 1996 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவத் தினருடனான மோதலின் போது, வீரச்சாவடைந்த இரண்டாம் லெப். வேலவன் சிவபாதம் சிறிஸ்கந்த ராசா (அளவெட்டி வடக்கு) எனும் மாவீரரின் வீரவணக்கக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

அளவெட்டி மகாஜனசபை மண்ட பத்தில் நடைபெறவுள்ள வீரவணக் கக் கூட்டத்தில் - மாவீரர்களின் உரு வப்படங்கள் பொதுமக்களின் அஞ்சலிக் காக வைக்கப்படும். பின்னர் அஞ் சலியுரைகள் நிகழ்த்தப்பட்டு, விசேட மரியாதைகளுடன் எடுத்துவரப் பட்டு, கோப்பாய் மாவீரர் துயிலுமில் லத்தில் நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்படும். (94)

## பங்கீட்டு அட்டைகள் மீளாய்வு

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 18 கிராம அலுவலகர் பிரிவுகளில்- உலர் உணவு பங்கீட்டு அட்டை கள் மீளாய்வு செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இத்துடன் 2004 சித்திரை மாதத் துக்குரிய உலர் உணவு பெறுவ தற்குரிய அனுமதிப்பத்திரங்கள் சகல கிராம அலுவலர்களால், பொதுமக்களுக்கு வழங்கப்படு கின்றன. (21)

## அளவைகளுக்கு முத்திரையிடல்

(உடுவில்)

வலி.தெற்குப் பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட வியாபார நிலை யங்கள், தனிப்பட்ட வியாபாரிகள் ஆகியோரின் தராசுப் படிகளுக்கு முத்திரையிடும் பணி நாளை மறு தினம் முதல் தொடர்ந்து 5 நாட்கள் வரை வலி.தெற்குப் பிரதேசசபை சுன்னாகம் அலுவலகத்தில் வைத்து முத்திரையிடப்படும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் உடுவில் பிரதேச சபையில் தராசுப் படிகளுக்கு முத் திரையிட தவறவிட்டவர்கள் இந் தச்சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்டச் செயலக நிலுவை அளவைப்பகுதியினர் அறிவித்துள்ளனர். (101)

- பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்படும் -

# மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்ய ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதி மாணவர் களின் கல்வியை அபிவிருத்தி செய் வது குறித்து- ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம், கல்வி அதிகாரிகளுடன் ஆராய்ந்து வருகின்றது.

இராணுவ உயர் பாதுகாப்பு வல யம் அமைந்துள்ளதால், இடம் பெயர்ந்து முகாம்களில் வாழ்ந்து வரும் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பட்டு வருவதை அடுத்தே, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இதன்படி மாணவ்களுக்குத் தேவை யான கல்விவசதிகள், மாணவர்கள் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் நெருக்கடி கள், பாடசாலைகள் இயல்பாக இயங்க முடியாமைக்கான காரணங் கள் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

இதன்போது மாணவர்கள் கற் றல் செயற்பாட்டுக்கு பாதிப்பு ஏற் படும் பட்சத்தில், அந்தப் பிரச்சினை களை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரியவருகிறது.

இதற்காக ஆசிரியர்கள், அதிபர் கள், மாணவர்களின் அனைத்து ஆய் வுக் கருத்தரங்குகளையும் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் நடாத்தி வருகின்றது. (17)

# நல்லூர் ஆயுர்வேத வைத்தியசாலையில் பெருமளவானோர் பயன்பெறுகின்றனர்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச சபையினரால் நடத்தப்படுகின்ற இலவச ஆயுர் வேத வைத்தியசாலையில் தற் போது, பெருமளவு நோயாளிகள் பயனடைந்து வருவதாக நல்லூர்ப் பிரதேசசபையினர் தெரிவித்தனர்.

நல்லூர்ப் பிரதேச சபையின ரால் திருநெல்வேலி, நல்லூர், கொக்குவில் மேற்கு, கோண்டாவில் ஆகிய பிரதேசங்களில் நடத்தப்படும் இலவச ஆயுர்வேத வைத்திய சாலைகளில், தற்போது நாளாந்தம் சராசரி முன்னூறுக்கும் மேற்பட்ட நோயாளிகள் பயன்பெற்று வருவ தாக நல்லூர்ப் பிரதேச சபையின் ஆயுர்வேத மருத்துவ உத்தியோ கத்தர் மகேஸ்வரி தெரிவித்தார்.

# பருவத்துக்கு முந்திய மழை; விவசாயிகள் பெரிதும் பாதிப்பு

பருவத்துக்கு முந்திய பெய்யும் மழை காரணமாக- விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இந்த வருடம் மாரிகாலம் ஆரம்ப மாவதற்கு முன்னரே கடும்மழை பெய்யத் தொடங்கியிருப்பதால், விவசாய நிலங்களில் பயிரிடப்பட் டுள்ள சிறுபோகப் பயிர்களை அறு வடை செய்வதில் விவசாயிகள் சிக்கலை எதிர் நோக்கியுள்ளனர்.

சில விவசாயிகளுடைய தோட் டங்களில்- வெங்காயம் மற்றும் குரக் கன், பயறு போன்ற தானியங்களும் அறுவடை நிலையிலுள்ளன. இவற்றை அறுவடை செய்து உரியமுறை யிலே பதப்படுத்தவதற்கு மழை இடையூறாக இருப்பதால், இப் பயிர்களை பயிரிட்டுள்ள விவசாயி கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெங்காயச் செய்கைக்கான கால போகம் நிறைவுற்றிருந்தும், சிலர் வெங்காயத்துக்குள்ள கேள்வியின் காரணமாக, பருவம் தவறி வெங் காயச் செய்கையில் ஈடுபட்டமையும் குறிப்பிடத்தக்கது. அவ்வாறு ஈடு பட்ட விவசாயிகளுள் பெரும்பாலா னோரே தற்போது சிக்கலை எதிர் கொண்டுள்ளனர். (94)

## நோய் தடுப்பு மருந்தேற்றல்

வலி.வடக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கோழிவளர்ப்போர்- கோழிகளுக்கான நோய்த்தடுப்பு மருந்துகளை ஒவ்வொரு சனிக் கிழமைகளிலும் காலை 8.30 மணிக் கும் 9.30 மணிக்கும் இடையில் சுன் னாகம் கால்நடை வைத்திய அதி காரி பணிமனையில் பெற்றுக்கொள்ள லாமென கால்நடை வைத்தியர் பி.மகாதேவன் அறிவித்துள்ளார்.(101)



அண்மையில் மகளிர் சங்கம நிகழ்வு சாவகச்சேரி இந்துக் கல்லூரி யில் நடைபெற்ற போது மட்டுவில் இணைப்பாளர் தயாளினி உரையாற்று வதையும், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பர நாதன் மற்றும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் உட்பட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (29)

# கைதான பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் விடுவிக்கக் கோரிக்கை

புன்னாலைக் கட்டுவன் - ஈவி னைப் பகுதியில் பொலிசாரால் சந் தேகத்தின் பேரில் கைதுசெய்யப் பட்ட இரு பல்கலைக்கழக மாணவர் களையும் அவர்கள் பல்கலைக் கழ கப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வசதி செய்யுமாறு மாணவர்களின் பெற் றோர் பொலிசாரைக் கோரியுள்ளனர்.

கடந்த மாதம் ஈவினைப் பகுதி தோட்டத்தில் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இந்தக் கொலைச் சம்பவங்கள் தொடர்பாகப் பொலிசாரல் இந்த இரு பல்கலைக்கழக மாணவர்களும் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் வர்த்தக முகாமைத் துவ பீடத்தைச் சேர்ந்த துசிகாந், விவசாய பீடத்தைச் சேர்ந்த சசீலன் என்பவர்களாவர்.

இவர்களுக்கும் கொலை செய் யப்பட்டவருக்கும் இடையில் நீண்ட நாட்களாகப் பகைமை இருந்து வந் துள்ளது எனப் பொலிசார் விசார ணைகளில் தெரிய வந்துள்ளது. அடுத்து இவர்கள் சிறைச் சாலை யில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி இவர்கள் பல்கலைக்கழகத்தில் பரீட் சைக்குத் தோற்றவேண்டி இருப்ப தால் இவர்களைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏற்பாடு செய்து தரும்படி இவர்களது பெற்றோர், சுன் னாகம் பொலிஸாரிடமும், பல் கலைக்கழக மாணவர் ஒன்றியத்திட மும் கோரியுள்ளனர்.

## தென்னங்கன்றுகள் தேவைப்படுவோர் விண்ணப்பிக்கலாம்

(கரவெட்டி)

வீடுகளிலோ, தோட்டங்களிலோ தென்னை பயிரிட விரும்புபவர்கள் தமக்கு வேண்டிய தென்னங்கன்று களை விவசாய அமைப்புக்களுக் கூடாக, கரவெட்டிப் பிரதேச செயல கத்தில் பதிவு செய்து பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

தென்னை பயிரிடுவோருக்கான பயிற்சி வகுப்பொன்று, தென்னை வள ஆராய்ச்சி உத்தியோகத்தரி னால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பை மூத்த விநாயகர் விவசாய கூடத்தில் நடத் துவதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாகப் பெரும்பாக உத்தி யோகத்தர் - பிரதேச ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டத்தில் தெரிவித்தார். இதற்கான திகதி பின்னர் அறிவிக் கப்படும். (13)

# கற்கள் பறிக்கப்பட்டும் வீதி திருத்தம் தாமதம்!

யாழ்.மாவட்டத்தின் பலபகுதிக ளிலும் உள்ள வீதிகளைத் திருத் துவதற்காக கற்கள் பறிக்கப் பட்டும், அந்த வீதிகள் திருத்தப்படா மல் இருப்பது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்திவரு கிறது.

இதுகுறித்துப் பொதுமக்கள் தரப் பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

நீண்டகாலங்களாகத் திருத்தப் படாமல் இருந்த வீதிகள் பல, இந்த முறை திருத்தப்படுவதற்கான ஒழுங்கு கள் செய்யப்பட்டன. இதனால் பொதுமக்கள் தமது வீதிகள் திருத் தப்படப்போவதையிட்டு நிம்மதிய டைந்திருந்தனர். எனினும் யாழ். நகரை அண்டியபகுதி உட்பட யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் உள்ள ஒழுங்கைகள், துணைவீதி கள் முதலானவற்றைத் திருத்துவதற் கான மண், கல், முதலானவை பறிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கும் மேலாகியும், பல வீதிகள் திருத்தும் பணிகளை இதுவரை ஆரம்பிக்கப் படவில்லை.

இதுகுறித்து அந்தப் பகுதி பிர தேசசபைகள், நகரசபைகளிடம் பொதுமக்கள் முறைப்பாடு தெரி வித்தபோது, தற்போது மழைக் காலம் ஆரம்பித்துள்ளதைக் கார ணம் காட்டியுள்ளனர்.

மழைகாலம் வருமுன் இந்த வீதி களைத் திருத்தும் பணிகளை ஆரம் பிக்காது கண்துடைப்புக்கான இத்த கைய நடவடிக்கைகளை அதிகாரி கள் மேற்கொண்டுள்ளமை கவலை யளிப்பதாகவும், தற்போது ஆரம்பித் திருக்கும் மழையால் மேலும் வீதி கள் சேதமடைய நேரிடுவதாலும், வீதிபோக்குவரத்தைப் பாதிக்கும் வகையில் திருத்தப் பணிக்காக போடப்பட்டுள்ள மண், கல் போன்ற வற்றாலும் பொதுமக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (101)

## நடமாடும் வங்கிவாரம்

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி, இந்த வாரத்தை தேசிய சேமிப்பு நடமாடும் வங்கி வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்த வாரத்தில் கிராமங்கள் தோறும் நேரடியாகச் சென்று கிராம மக்கள் மத்தியில் சேமிப்பு நடவடிக் கைகளை ஊக்குவித்து வருகின்றனர்.

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் இந்த நடமாடும் வங்கி வாரத்தை - கடந்த 24 ஆம் திகதி வங்கி முகாமையாளர் ரீ.பரமானந்தம் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த வங்கி 25 வருடகால சேவை யைப் பூர்த்திசெய்ததை ஒட்டியே இதனை ஏற்படுத்தியுள்ளார். (14)

# வாழ்த்துச் செய்தி

ஒரு ஆலயத்தின் மூலமூர் த்தியாக எழுந்தருளியிருக்கும் இறைவனின் திருக்கோலத் தைப் பொறுத்து உற்சவங்கள் இடம் பெறும். வல்லிபுர சேத்திரத்தில் நாராயணனின் திருவிளையாடல்கள், லீலைகள் அவதார நோக்குகள்• ஆகியன உற்சவங்கள் மூலம் சித்தரிக்கப்படுகின்றன. எனினும் தேர் ரோட்டம், தீர்த்த உற்சவங்கள் ஒரே ஒழுங்கு முறையில் எல்லா ஆலயத்திலும் அமையும்.

வல்லிபுரமாயவனின் தாரண வருட மஹோற்சவம் இம் மாதம் 13ம் திகதி ஆரம்பித்து தேர் ரோட்டம், தீர்த்தம் ஆகியன முறையே இம்மாதம் 27ம், 28ம் திகதிகளில் நடைபெறும். இந்நன் நாட்களில் வெளிவரும் பத்திரிகைகள் தாங்கிவரும் சிறப்பிதழ்களுக்கு இச்செய்தயை வழங்குவதில் மகிழ்ச்சிய டைகின்றேன்.

இம்மாதம் 27 ம் திகதி திங்கள் காலை 8 மணிக்கு வல்லிபுரமாயவன் உக்கிர தோற்றத்தில் காட்சி தந்து சித்திரத்தேரில் எழுந்தருளி வீதிவலம் வருவார். வீதிவலம் நிறைவுறும் போது உக்கிரம் மறைந்து சாந்த நாயகனாக பச்சைசாத்தி இருப்பிடம் வந்தடைவார்.

28 ஆம் திகதி பூரணை தினமான செவ்வாயன்று சந்தி ரோதய நேரத்தில் சமுத்திரத் தில் தீர்த்தமாடும் பொருட்டு பிற்பகல் 4.30 மணியளவில் சமுத்திரம் நோக்கித் தொண்டர்கள் தோளில் சுமந்துசெல்ல, பக்தர்கள் புடைசூழ எழுந் தருள்வார். சமுத்திரத்தில் அனுமார், சண்டேஸ்வரர் ஆகியவற்றுக்கு அபிஷேகம் செய்தபின் சந்திரோதயத்தில் தீர்த்தமாடியதுடன் ஆலயம் நோக்கிப் புறப்படுவார்.

வல்லிபுர மகாஷேத்திரத்தின் அருங்காட்சிகளை நேரில் தரிசித்து, அன்றில் ஒளி, ஒலிபரப்பு மூலம் கண்டும், கேட்டும், அன்றில் இந்தச் சிறப்பிதழ்கள் மூலம் மனந்திருந்த எம் பெருமானின் அருளை யாவரும் பெறவேண்டும் என பரந்தாமனை யாசிக்கின்றேன்.

ஓம் நாராயணா நம

இ. அன்னலிங்கம்
முகாமை அறங்காவலர்

# ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தீர்



ஈழத்திருநாட்டில் ஈடு இணையற்ற வைணவத் திருத் தலங்களுள் முதன்மையான திருத்தலமாக விளங்குவது ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில். வரலாற்று சிறப்புமிகு இந்த ஆலயம் அந்நியராட்சியிலும், ஈழப்போர் நடைபெற்ற காலங்களிலும் எவ்வித இடையூறுகளும் இன்றி, எல்லா மதத்தவர்களாலும் வழிபடப்பட்டு இந்து மதத்தை தன்நிகரற்று வளர்த்தெடுத்த பெருமை கொண் டது.

மூலஸ்தானத்தின் விஷ்ணுவின் சக்கராயுதத்தை வைத்து வழிபடும் சிறப்புக்குரியது. இந்த ஆலயத்தின் கிரியைகள் சைவ ஆகம முறைப்படி நடைபெறுவது விஷேடித்துக் கூறக்கூடியது. ஞாயிற்றுக்கிழமைகளில் பெரும் பக்தர் கூட்டம் நிறைந்து எம் பெருமானுக்கு விஷேட பூஜைகள் செய்யப்பட்டு, வீதி வலம் வரும் திருக் காட்சியும், ஸ்ரீராமநவமி, ஸ்ரீகிருஷ்ண ஜயந்தி, ஏகாதசி போன்ற சிறப்புமிகு உற்சவங்கள் வெகு விமரிசையாக இடம்பெறுவதையும் நாம் காணலாம்.

ஆலயங்களில் மஹோற்சவமானது, நாடடில் மழை மும்மாரி பெய்து, மக்கள் நல்வாழ்வு வாழவும், நாட்டில் சமாதானமும் - சுபீட்சமும் கிடைக் கப்பெற நடைபெறுகின்றன. மஹோற்சவ பெருவிழா இத்தலத்தில் புரட்டாதி மாதம் பௌர்ணமி தினத்தை சமுத்திர தீர்த்த உற்சவமாகக் கொண்டு 17 தினங்கள் நடைபெறுகிறது. இதில பாம்புத் திருவிழா, துயில் திருவிழா, வெண்ணெய்த் திருவிழா, கம்சன் திருவிழா ஆகிய உற்சவங்கள் கண்ண பிரானின் திருவிளையாடல்களை எடுத்தியம்பும் அருட்காட்சிகளாக அமைவன - ஆலயத்தின் சிறப்புமிகு உற்சவமான சமுத்திர தீர்த்தம் மகா விஷ்ணு மச்சமாக வங்கக் கடலில் தோன்றியதை நினைவூட்டுவது. அன்றைய நன்னாளே இந்நாள். அதன் வரலாற்றை சற்று நோக்குவோம்.

வல்லி நாச்சியார் வராத்துப் பளை ஊரைச் சேர்ந்தவர். வராத்துப்பளை கற்கோவளத்தி ஓர் பகுதியாகும். வல்லி நாச்சியார் கன்னியாகவே காலம் கழித்தார். பசுக்கள் வளர்த்துப் பாதுகாத்தலே அவர் பணியாகியது. கள்ளமில்லாத வெள்ளையுள்ள முடைய வல்லி நாச்சியார் நாராயணன் மீது அளவுகடந்த பக்தியுள்ளவர்.

வல்லி நாச்சியார் வாழும் காலத்தில் வங்கக்கடலோர கற்கோவள மீனவருக்கு ஒரு வினோத மீன் துள்ளிக்குதித்து அதிசய விளையாட்டைக் காட்டி வந்தது. வல்லி நாச்சியின் கனவிலும் இது ப்றறிய காட்சி தென்பட்டது. மறுநாட்காலை ஒரு வெள்ளிக்கிழமை புனிதமாக நீராடிவிட்டு வங்கக்கடற்கரைக்குச் சென்று நீராடி, பக்திகீதம் பாடி கண்ணா! கோவிந்தா!! கோபாலா!!! என உரக்க கண்ணன் திருநாமங்களை உச்சரித்தும் மீன் வல்லி நாச்சியாருக்குத் தென்படவில்லை. மறுநாட்காலையிலும் அதேபோல் நீராடிவிட்டு கடற்கரைக்குச் சென்று முன்போல் கண்ணபிரானை வேண்டியபோது, அப்பிராட்டியின் மடியில் அம்மீன் வந்து விழுந்ததும் மறுகணம் அழகிய ஆண்குழந்தையாக மாறியது. அந்தக் குழந்தையை அணைத்து எடுத்து வருகையில் அந்தப் பெண்மணி மயங்கி விழுந்தாள்.

கண்ணீர்
கோவிந்
தீர்த்தக்
யாக ய
ஸ்ரீ இல்
பகுதி அ
...கோ
எழு...யும்
நி...து
வங்கக்க
தூக்கி
பாக்கு
சக்கரத்
ஏற்றப்
கள் நீங்
இந்தக்
சோபலட்
கேணியில்
ஓ


ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்
கொடிகாமம் வீதி, T.P.226 3282 நெல்லியடி.
புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே
எங்கள் புருஷோத்தமன் புகழ் பாடுங்களே

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்
சுசீலா ஆபரண மாளிகை
258, பிரதான வீதி, T.P. 226 3064 பருத்தித்துறை
எப்போது அதர்மம் ஓங்குகிறதோ அப்போதெல்லாம் அதர்மத்தை அழித்து
தர்மத்தை நிலைநாட்டுவதற்காக நான் யுகம் தோறும் அவதரிக்கிறேன்.

துளசி வீடியோ
கிராமக்கோடு, ஆய்பாடிப் பிள்ளைகளோடு அமுத
அந்தக் கோகுலம் சென்றே அன்று

ஜனனி பல்பொருள் வாணிபம்
நெல்லியடி, கரவெட்டி
தன் சாயம் நீக்கிடவே இந்திரன் வந்தான்
கன்னி சாபம் நீக்கிடவே வல்லி நாச்சியாரும் வல்லிபுரம் வந்தார்


## ஆலயத்தின் அறப்

- தமிழ் மக்களில் பலரின் நோய்களுக்கு இருதய சத்திர சிகி சிகிச்சை உட்பட பல நோய்களுக்கும் வைத்திய சிகிச்சைக்கா
- வடமராட்சி கரையோரப் பகுதிமக்களின் குடிநீர்ப்பிரச்சினைக் கொள்வனவு செய்து நீர் வழங்கி வருகின்றமை.
- செல்வச்சந்நிதியின் சித்திரத் தேரினை எட்டுமாத காலத்து 80 லட்சம்.
- வடமராட்சி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு வெற்றி
- வடமராட்சிப் பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்கள் வழங்கி வருகின்றமை.


பார்க்கும் இடமெங்கும் நந்தலாலா
உன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா
சாவகச்சேரி
பூம்புகார் சில்க் ஹவுஸ்
பிரதான வீதி, நெல்லியடி

ரஞ்சன் போட்டோ அன் வீடியோ
பிரதான வீதி, மந்திகை T.P. 077 6145409 புலோலி
கோடி மாந்தர் வினைகள் தீர்க்கும் ஆலயம் அன்றோ
கோவிந்தன் நாளும் வாழும் ஆலயம் அல்லவோ


- ஆலயத்தினர் வரும் கணினி நிலையத் கணினி) 500 மாண பயிற்சி பெற்று வெளியே
- அறநெறிப் லையை இயக்கி வருக இந்த மாணவர்களுக்கு கலைப்பயிற்சி வழங்கப்
- ...ட்டமி...ப்பட்ட பணிகளாவன - வடக்கு, மேற்கு வாசல்களுக்கு அமைத்தல்.
- நவீன முறையில் கல் மடம் அமைக்கப்
- பூங்காவனம் ஓ ஆலயத்தின் மேற்கில் செய்தமை.


யோகேஸ் கிறீம் ஹவுஸ்
கந்த முருகேசனார் சிலையடி மந்திகை
இளவேனிற் காலத்துப் புஸ்பங்களே
எங்கள் துவாரகை மாமன்னன் புகழ் பாடுங்களே
T.P. 0777155605

செல்லமுத்தூஸ் புடவை மாளிகை
பிரதான வீதி, T.P. 3283, 070 212509 நெல்லியடி
கோகுலத்துப் பசுக்களெல்லாம் கோவிந்தன்
பெயரைச் சொல்லி நாலுபடி பால்கறக்குது




# மீனை விட யாருமில்லை



பொதுவாகவே உலகம் முழுவதும் மக்கள் கடலுணவுகளை அதிகமாக உண்ணத் தொடங்கியிருக்கிறார்கள். இதன் காரணமாக சர்வதேசக் கடற்பரப்பில் பிடிக்கப்படுகின்ற மீன்களின் அளவும் அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

கடல் மீன்களை நம்பி வாழ்கின்ற பறவைகள் இப்போது உணவுப் பற்றாக்குறை காரணமாக இறக்கின்றன.



மில்லியன் தொன்கள் அளவில் பிடிக்கப்படுகின்ற மீன்கள் உணவுக்காக மட்டுமல்ல, மீன் எண்ணெய்க்காகவும் பயனபடுத்தப் படுகின்றன.

பாரிய கப்பல்கள் மீன்களைப் பதப்படுத்தும் தொழிற்சாலைகளாகக் கடலிலே மிதக்கின்றன. அத்துடன், ஒரே இடத்திலேயே அளவுக்கதிகமான மீனினங்கள் பிடிக்கப்படுகின்றன.

கடலில் காணப்படும் மிகவும் அரிதான பறவைகள் இந்த மீனினங்களையே மட்டும் உணவாகக் கொள்கின்றன. இவை இல்லாவிடின், இந்தப் பறவைகளின் அழிவு உறுதிப்படுத்தப்படுகிறது. தற்போது ஏறக்குறைய 17.9 இற்கும் 39.5 மில்லியன் தொன்களுக்குமிடையே மீன்கள் வியாபார நோக்கத்துக்காக மட்டும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

ஆனால், 1997 - 2000 ஆம் ஆண்டுகளுக்குமிடையில் ஏறக்குறைய 6.3 மில்லியன் தொன் மீன்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டன, இந்தப் பெரிய அதிகரிப்பு 2010 ஆம் ஆண்டளவில் இன்னும் அதிகரித்துக்கொண்டே செல்லும் எனக்கூறப்படுகின்றது.

# இலத்திரன் போர்ட்டினூடாக

வைரஸ்கள் மூலம் கணினித் தொழிற்பாடுகளை ஸ்தம்பிக்கச் செய்யும் முயற்சி நாம் அறிந்தவிடயம். இது கணினி மென்பொருள் மூலம் செய்யப்படுகின்றது. ஆனால் இப்போது இங்கிலாந்துப் பொலிஸாரால் ஒருவர் பிடிக்கப்பட்டிருக்கிறார். அவர் கணினியின் கடின பொருள் மூலம் பல்வேறு கணினிகளை இயங்காமல் செய்யக் கூடிய அரிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றியடைந்தவராக இருக்கிறார்.



இது அவரால் இணையத்தளம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்திருக்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. இலத்திரனியல் சாதனங்களில் சிங்கோ எனப்படுகின்ற கடினப் பொருள் இருக்கின்றது.

இதனை மின்அஞ்சல், படங்கள், வீடியோ ஆகியவற்றின் மூலம் தொழிற்படு திறனைத் தடுக்கக் கூடியவாறு இன்ரநெட் மூலம் கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. 1990 ஆம் ஆண்டிலிருந்தே அத்தகைய முயற்சிகள் நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. தற்போது சிங்கோ இலத்திரனியல் போர்ட்டின் மீது எல்லோரும் குற்றஞ்சாட்டத் தொடங்கியிருக்கிறார்கள்.

## கணினி பழுது

ஆனால் பாரியளவில் உற்பத்தி செய்யப்பட்டவையும், அத்துடன் வினைத்திறன்கள் கூடியவையுமான இந்த சிங்கோ போர்ட்கள் உடனடியாக மாற்றமுடியாதவையாக இருக்கின்றன. அத்துடன் இதனைத் தடுப்பதற்கான வழிமுறையாக எவ்.பி.ஐ. புலனாய்வு நிறுவனம் தனது வேலையைத் தொடங்கியிருக்கின்றது.

# கம்பீரத்துடன்



# தனியார் மருத்துவமனை

அரச வைத்தியசாலைகளை விடத் தனியார் வைத்தியசாலைகளை மக்கள் அதிகளவில் இப்போது விரும்பத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் அரசாங்கம் பல்வேறு இலவச சலுகைகளைக் கொடுத்திருக்கிறது. ஆனாலும் மக்கள் அரச வைத்தியசாலைகளை நம்புவதாக இல்லை.

இதேவேளை 2006 ஆம் ஆண்டுக்கு பிறகு உலகின் பெரும்பாலான நோயாளிகள் தனியார் வைத்தியசாலைகளை நோக்கிப் படையெடுக்கத் தொடங்குவார்கள் என்ற கருத்தும் இருக்கின்றது. அமெரிக்காவில் வைத்தியசாலைக் கட்டணங்களில் அதிரடிச் சலுகைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அது நோயாளர்களைப் பெரிதும் கவர்ந்ததாகக் காணப்படுகின்றது. ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து ஆகிய 2 நாடுகளிலும் ஏறத்தாழ 65 தனியார் வைத்தியசாலைகள்- அரச வைத்தியசாலைகளை முறியடிக்குமளவுக்குத் தங்களை வளர்த்திருக்கின்றன. அரச வைத்தியசாலைகளை விட்டு முழுநேரமும் தனியார் வைத்தியசாலைகளில் தங்களை இணைத்துக் கொள்ள வைத்தியர்கள் ஐரோப்பிய நாடுகளில் முன்னிற்கிறார்கள்.

இதற்குக் காரணம் அங்கே கொடுக்கப்படுகின்ற அதிக சம்பளம் மற்றும் போனஸ் தொகை என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். இந்தப் போக்கில் போனால் பல அரச வைத்தியசாலைகளுக்கு மூடுவிழா தான்.

# வேலைசெய்யும் பெண்கள்



பெண் விஞ்ஞானிகள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்களிடையே அண்மைக்காலமாக ஒரு சோர்வு காணப்படுவதாக, ஆய்வுகளை மேற்கொண்ட ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

100 க்கும் அதிகமான பெண்களை எடுத்து மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு முயற்சியானது - வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் 4 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களைச் செலவழித்திருப்பதாகக் கூறப்படுகிறது. இது ஐரோப்பிய நாடுகளை மட்டுமல்ல தற்போது இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளிலும் அதிகரித்துக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது. 40 வீதமான பெண்கள் பெரிய பதவிகளில் பெயருக்குத்தான் இருக்கிறார்களே தவிர அவர்களுடைய மூளை செலவழிக்கப் படவில்லை எனவும் ஆய்வாளர்கள்குத் திக்காட்டுகிறார்கள். பொதுவாகப் பெண்கள் தங்களுடைய தொழிலில் முழுத்திறமையையும் காட்டுவதில்லை என்றநிலை இருக்கிறது.

அவர்கள் அரைவாசித் திறமையையே வெளிப்படுத்துகிறார்கள். அதுவும் திருமணமாகிய பெண்களுக்குக் குடும்ப மற்றும் அலுவலகப் பொறுப்புக்கள் ஒன்றுசேருவதால் அவர்கள் குடும்பத்துக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தங்களுடைய வேலையைச் சரியாகக் கவனிக்க முடியாதுள்ளது.

# வீடியோ வீட்டுத் தொலைபேசி

அம்ஸ்ராட் என்ற நிறுவனம் மலிவு விலையில் வீடியோ வீட்டுத் தொலைபேசிகளை விற்கத்தொடங்கியிருக்கின்றது. இது ஈ3 என அழைக்கப்படுகின்றது. ஒரு தொலைபேசியின் விலை 99 ஸ்ரேலிங் பவுண்களாகவும், இரண்டு தொலைபேசிகளை வாங்கினால் 179 ஸ்ரேலிங் பவுண்களாகும் என்று விலை குறிக்கப்பட்டுள்ளது.




இதேவேளை, இந்தத் தொலைபேசிகள் மூலம் ஈமெயில் மற்றும் வெப்தளங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. படங்களை மற்றைய கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் கணினிகளுக்கு அனுப்பக் கூடிய வசதியும் இதில் காணப்படுகிறது. இத்தகைய தொலைபேசிகள் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் சந்தைக்கு வந்தன. ஆனால் இப்போதுதான் பல்வேறுபட்ட வசதிகளுடன் இவை இயங்கத் தொடங்கியிருக்கின்றன.

அம்ஸ்ராட் கம்பனியில் ஈமெயில் - 15 பென்னி வீடியோ அழைப்புகள் - 50 பென்னி, இன்ரநெட் - 5 பென்னி, படம் அனுப்பின் - 25 பென்னி, மல்ரி மீடியா தகவல் - 1ஸ்ரேலிங் பவுண், சாதாரண தகவல்கள் - 50 பென்னி என அறவிடப்படுகின்றது. ஆனால் இந்தத் திரையில் தெரிகின்ற விம்பம் தொலைக்காட்சியில் தெரியும் விம்பங்கள் போலல்லாது தெளிவற்று அதாவது நிறங்கள் மங்கிக் காணப்படுகின்றன.

# தோல்வியில் முடியும்



கண்மாற்றுச் சிகிச்சை செய்யும் பொழுது பெரும்பாலானவர்களுக்கு வெற்றியளிப்பதில்லை. இதற்குரிய காரணம் - இரண்டு கண்களின் விழிவெண்படலம் வேறுபடுவதாலாகும். யப்பானிலுள்ள ஒசாக்

## கண் மாற்று சிகிச்சை

காப் பல்கலைக்கழகத்தில் இதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டுவருகின்றன. கண்மாற்றுச் சத்திரசிகிச்சை நடைபெற்று முடிந்தவுடன் ஆரம்பத்தில் மங்கலாக இருக்கும். காலப்போக்கில் இந்த மங்கல் மறைந்து கண் தெளிவாகத் தெரியத் தொடங்குகிறது. ஆனால் இப்போது இந்தக் கண்மாற்றுச் சிகிச்சையால் மங்கல் மறையாது தொடர்ச்சியாக இருக்கின்றது. சிலருடைய கண்கள் விபத்துக்களால் பாதிப்படைகின்றன. அப்போது கண்களில் விழிவெண்படலமும் அதனைச் சுற்றியுள்ள இழையங்களும் பாதிப்படைகின்றன. புதிய கண் ஒன்றைப் பொருத்தும் போது அந்த இழையங்கள் இந்த உயிரற்ற இழையங்களுடன் இணையாது போகின்றன. ஏறக்குறைய 14 மாதங்களாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய ஆராய்ச்சிகள் பல்வேறு மருத்துவ ஆய்வுகூடங்களில் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

அதன்மூலம் பழுதடைந்த கண்களில் ஏற்படுகின்ற சில நோய்களும் கண்மாற்றுச் சிகிச்சை வெற்றியடையாதிருக்கக் காரணமாக அமையலாம்

# திரை விமர்சனம்

## அரசாட்சி



பல வருடங்கள் தாண்டித் திரைக்கு வந்திருக்கும் படம் இது. வழக்கமான அர்ஜுன் மசாலா இங்கே தூவப்பட்டிருக்கின்றது. எத்தனை நாளைக்குத் தான் இப்படிப் புளித்துப்போன மாவை வைத்து ரொட்டி சுடப்போகிறார்களோ தெரியவில்லை.

ஒரு ஓய்வு பெற்ற நீதிபதி ரயிலில் கொல்லப்படுகின்றார். அந்த வழக்கில் கொலையாளிகள் தப்பிவிடுகின்றார்கள். நீதிபதியின் குடும்பத்தில் எஞ்சியிருப்பவர் அர்ஜுன். குற்றவாளிகளைத் தப்பவிடும் வழக்கறிஞர்களை வரிசையாகக் கொல்கிறார் கதாநாயகன் அர்ஜுன். இதன் மூலம் வழக்கறிஞர்கள் மத்தியில் பீதி கிளம்புகிறது. இந்தக் கொலை முயற்சியில் எவ்வளவு தூரம் சிக்கல்களை அனுபவித்துப் பின் அவர் தன்னுடைய இறுதிஇலக்கை அடைகிறார் என்பது தான் படத்தின் கதை.

விளையாட்டாக கொலை செய்தாலும், யதார்த்தமாகக் கொலை செய்தாலும் ஒவ்வொரு காட்சியிலும் இயக்குநர் முத்திரை பதித்திருக்கின்றார். ஆனால் சில காட்சிகளில் முற்று முழுதான பம்மாத்துத் தெரிகின்றது. கதாநாயகி லாராதத்தா படத்தில் என்ன செய்திருக்கின்றார் என்பது தெரியவில்லை. இது முற்று முழுதான வில்லன்கள் படம் என்றே சொல்லவேண்டும். ஆனந்தராஜ், தேவன், சரண்ராஜ், மணிவண்ணன், பொன்னம்பலம், ராஜன்பிதேவ் என ஒரே வில்லன்கள் பட்டாளம்.ஆனால் வில்லன்களின் வில்லனாக மனதை கொள்ளை கொள்கிறார் ரகுவரன்.

கரன், நாசர், வாசு மற்றும் சரவணப்பெருமாள் ஆகியோர் நடித்திருக்கிறார்கள். பொலிஸ் அதிகாரியாக மன்சூர்அலிகான் நடித்திருக்கிறார். அவர் முன் விவேக் பாவம்.

இசை- ஹரிஸ்ஜெயராஜ் இரண்டு பாடல்கள் இனிமையாக இருக்கின்றன. ஒளிப்பதிவு- சரவணன் திறமையாகச் செய்திருக்கிறார்.

திரைக்கதையின் மெலிவு இந்தப் பட்த்தினை தாக்கியிருக்கின்றது.

"அரசாட்சி" தேர்தலில் தோல்வி.

- கலா

# 'அணு' உன்னைவிட முடியாது



ஐரோப்பிய நாடுகள் ஆரம்பத்தில் அணுசக்தியை வெறுதது ஒதுக்கின. ஆனால், தற்போது கூடுதலான அணுசக்தி உற்பத்தி நிலையங்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுக் கொணடிருக்கின்றன.

ஆனால், ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுகின்ற சடுதியான காலநிலை மாற்றங்களுக்கு இந்த அணு நிலையங்கள் காரணமாக அமைகின்றன.

காபனீரொட்சைட் சொல்லமுடியாதளவுக்குப் பல்கிப் பெருகிக் காணப்படுகின்றது. மின் உற்பத்தியின் பாதிப் பகுதி அணுமின் உற்பத்தியாக இருக்கின்றது. தற்போது ஐரோப்பிய நாடுகளிலுள்ள சில கிராமங்களில் சூரியக் கலங்களே மின்சாரத்துக்காகப் பாவிக்கப்படுகின்றன.

அந்தப் பிரதேசங்களில் அவ்வளவாகக் காலநிலை வேறுபாடுகள் இல்லை. ஆனாலும், அணுசக்தி உண்மையிலேயே உலகளாவிய ரீதியில் முதலிடம் பெறுகின்றது என்பதை மறுக்கமுடியாது. அணுசக்தியைப் பாவிப்பதை சாதாரண தேவைகளுக்கு நிறுத்தி விடலாம்.

ஆனால் அணு ஆயுத உற்பத்தியில் இதன் செல்வாக்கை நிறுத்தமுடியுமா என்ற கேள்வி இருக்கின்றது. இப்போது மறைமுகமாக சிறியளவில் ஏவுகணைகள் மற்றும் ஆயுதங்களில் அணுகுண்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் அணு சக்தியானது மீள மீளப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இதுவும் இந்த அணு சக்தியை விடாமல் தொழில்நுட்பவியலாளர்கள் பாவிக்கக் காரணமாகிறது.

# அரைகுறை அழகிகள்

இன்றைய காலகட்டத்தில் எதிலுமே ஆபாசம் கலந்துவிடுவது என்பது கவலையான விடயந்தான். ஆனால் இது தவிர்க்கமுடியாத ஒன்றாகி விட்டதால், விளம்பரங்கள் தொடக்கம் பல விடயங்களில், கவர்ச்சியான பல பெண்களின் படங்களைப் புகுத்தி விடுகின்றார்கள். எந்தப் பொருளின் விற்பனை விளம்பரங்களை எடுத்தாலும், அங்கே அரைகுறை உடையில் வரும் கவர்ச்சியான பெண்களைக் கொண்டுவந்து விடுகிறார்கள். பற்பசை விளம்பரங்களிலும் சரி, பட்டுப் புடவை விளம்பரமானாலும்சரி இளம் பெண்களை அரைகுறைக் கோலங்களில் கொண்டு வந்து விடுகிறார்கள்.



தொலைக்காட்சி நிலையங்களையும், கவர்ச்சிக் கன்னிகள் மொய்க்கிறார்கள். பல தொலைக்காட்சி நிலையங்கள், கவர்ச்சியை நம்பியே பிழைத்துக் கொண்டிருக்கின்றன. அண்மைக் காலங்களில் இத்தாலிய தொலைக்காட்சி சேவைகளில், கவர்ச்சி பெரிதாக நுழைந்திருப்பது, பார்வையாளர்களின் அதிருப்தியைச் சம்பாதித்து இருக்கிறது. இத்தாலிய தொலைக்காட்சிகளில் வானிலை அறிக்கைகளை, இராணுவ அதிகாரிகள், முழுமையான சீருடையுடன் வந்து அறிவிப்பது காலங்காலமாக இருந்து வந்த வழமையாகும். ஆனால் கடந்த செப்டெம்பரில், இந்த வழமைக்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுது இவர்கள் இடத்தை அழகிகள் பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

# சொனியின் விற்பனையில் வீழ்ச்சி

வர வர இலத்திரனியல் சாதனங்களின் விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது. கடந்த வருடம் கிறிஸ்மஸ் காலத்தில் ஏற்பட்ட மெகா விற்பனை இப்போது இல்லை. அத்துடன் வருகின்ற கிறிஸ்மஸ் பண்டிகை வியாபாரம்கூட பெரிதாகக் கூறுமளவுக்கு இருக்கப்போவதில்லை என சொனி நிறுவனம் கூறுகிறது.



கணினியில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட சாதனங்களின் இணைப்பினால் தொலைக் காட்சிப்பெட்டி, வானொலிப்பெட்டி, டி.வி.டி, வி.சி.டி ஆகிய எல்லா அம்சங்களையும் தாங்கியதாகக் கணினி காணப்படுகின்றது. 2003 ஆம் ஆண்டுக்கான கிறிஸ்மஸ் வியாபாரம் சொனி கம்பனிக்கு மட்டும் ஏறத்தாழ 449 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் குறைத்துள்ளது.

இதேவேளை மொபைல் தொலைபேசிகளில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட வசதிகளும் இந்த விற்பனையைச் சற்றே குறைத்திருக்கின்றது என்றே கூறவேண்டும். தற்போது சொனி நிறுவனத்தினுடைய எல்லாத் தயாரிப்புக்களிலும் விற்பனையில் முன்னிற்பது தட்டையான திரையை உடைய தொலைக்காட்சிப்பெட்டிகள் தான்.

இது மற்றைய எல்லாவகையான தொலைக்காட்சிகள் மட்டுமல்ல, மற்ற சாதனங்களின் விற்பனையையும் உடைத்து முன்னுக்கு நிற்கிறது. இதன் காரணமாக சொனி நிறுவனத்தின் பங்குகளும் சந்தையில் வீழ்ச்சியைக் கண்டுள்ளன.

# விமானத்தில் போன்



கையடக்கத் தொலைபேசிகளில் இருக்கக்கூடிய மிக முக்கியமான குறைபாடு, அவற்றை விமானங்களில் பாவிக்க முடியாததாகும். தற்போது இவற்றை விமானங்களில் பாவிப்பதற் கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. ஏ320 என்ற பாரிய விமானம் இநத ஆய்வுகளுக்காக எடுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டு வருடங்களாக ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இந்த ஆய்வுகளின் விளைவாக 2006 ஆம் ஆண்டளவில் விமானங்களில் கையடக் கத் தொலைபேசிப் பாவனை இருக்கும் எனக் கருதப்படுகிறது.



இதேவேளை, சகல நாட்டு விமானங்களிலும் கையடக்கத் தொலைபேசிப் பாவனை தடைசெய்யப்பட்டிருக்கின்றது. விமான ஓட்டிகள் ஒரு வகையான வானொலி அலையைத் தங்களுடைய தொடர்புக்குப் பாவித்துக் கொண்டு வருகின்றார்கள்.

இந்தக் கையடக்கத் தொலைபேசி அவர்களுடைய தொடர்பு அலைகளைக் குழப் பக்கூடிய சந்தர்ப்பங்கள் இருப்பதால் விமானங்களில் கையடக்கத் தொலைபேசிப் பாவனை தடைசெய்யப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, கையடக்கத் தொலைபேசிகள் தோற்றாலும் செய்மதி மூலம் தொலைத் தொடர்வு வசதிகளை விமானத்தில் ஏற்படுத்தும்ட முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. கையடக்கத் தொலைபேசிகளை விமானத்தில் வைத்திருக்கக்கூடாது எனத்தடுத்த அமெரிக்க விமானசேவையே இப்போது இந்த ஆய்வுகளில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# சிக்கலான சிறுநீர் மாற்று சிகிச்சை

உலகளாவிய ரீதியில் 7000 இக்கும் அதிகமான மக்கள் சிறுநீரக நோயினால் அவதிப்பட்டு இறந்திருக்கிறார்கள். இதேவேளை ஐரோப்பிய நாடுகளில் மட்டும் 100,000 இற்கும் மேலான மக்கள் சிறுநீரக நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள்.



இவர்கள் இந்த நோய்க்காகச் செலவழிக்கும் பணம் வருடாந்தம் 2 பில்லியன் ஸ்ரேலிங் பவுண்களாக இருக்கின்றது. ஒரு சிறுநீரகம் பழுதடைந்தவுடனேயே அந்த சிறுநீரகத்தை அகற்றிவிட்டுவிட வேண்டும். ஆனால், இந்த அகற்றல் செய்யப்படாதிருப்பதனால் மற்றைய சிறுநீரகமும் பாதிப்புறுகின்றது. அதாவது, சிறுநீரகத்தில் காணப்படுகின்ற குறைபாடுகளை அறிவதற்கு மிகவும் முக்கியமான பரிசோதனை சிறுநீர்ப் பரிசோதனையாகும். சிலவேளைகளில் சிறுநீர்ப் பரிசோதனைமூலம் இதனைக் கண்டறிவது கடினமானதாக இருக்கிறது. ஐரோப்பிய் நாடுகளில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு நிறையப் பணம் செலவாகுவதாக இப்போது கூறப்படுகிறது. அதற்குமுன் நோயாளிகள் இரத்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள். சிலவேளைகளில் சிறுநீரில் தெரியாத அறிகுறிகள் இரத்தப் பரிசோதனையின்போது வெளிக்காட்டப்படுகின்றன.

இப்படியெல்லாம் பரிசோதித்து சிறுநீரகமாற்று அறுவைச் சிகிச்சையைச் செய்யத் தொடங்கும்பொழுது அங்கே பல சிக்கல்கள் உருவாகுகின்றன. அண்மையில் லண்டனில் மேற்கொள்ளப்பட்ட சிறுநீரக மாற்றுச் சிகிச்சையில் 8 மணித்தியாலங்கள் தொடர்ந்து இரத்தப் போக்கு ஏற்பட்டிருக்கிறது.

# ...தீர்த்தோற்சவ சிறப்பிதழ்




மீன்பிடிக்க வந்தவர்கள் வலையைத் தொட்டிலாக்கி, அதில் வைத்து தூக்கி வரும் போது, களைப்புற்றதால் தாகசாந்தி செய்யவிரும்பினர் தற்போது ஆலயம் அமைந்த இடத்திலேயே தொட்டிலை வைத்திருந்தனர். தாகசாந்தி செய்ததும் மீண்டும் தொட்டிலைப் பார்த்த போது குழந்தை திடீரென மறைந்துவிட்டது. அந்த இடத்தில் கிழப்பிராமணர் தோன்றி வல்லி நாச்சியாரிடமும், மீனவர்களிடமும் ஒரு சக்கரத்தைக் கொடுத்து அதனைப் பூஜிக்கும் படி கூறிச் சென்றார்.

அதன்படி அவர்கள் சிறு கொட்டில் ஒன்று அமைத்து சக்கரத்தையும் ஸ்தாபித்து விளக்கு வைத்து வந்தனர். இந்த அற்புதத்தால் ஈர்க்கப்பட்ட பொது சனங்களும் மிகுந்த ஈடுபாட்டோடு கலந்து வரலாயினர். இவ்வாறான வழிபாடே இன்றும் இந்த ஆலயத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

இன்றைய தினம் பக்தியும் மகிழ்ச்சியும் பொங்கும் திருநாள். ஈழத்து இந்துக்களின் தீர்த்த பெருவிழா மாயவனை விரும்பி வழிபடும் அடியார்கள் காதலால் கண்ணீர் மல்கி உடல் நலம் பெற்று பேரானந்தம் மேன்மேலும் பெருக - சங்கு, சக்கரம், கோவிந்தா. கோபாலா!! மாயவா, கேசவா!!! என்று அன்புருகி நிற்க, ஆலயத்தில் இருந்து தீர்த்தக்கரைக்கு சுமார் 3 1/2 மைல் தூரத்திற்கு மணல் குன்றுகள் ஊடாக கால் நடையாக யாத்திரை செய்யும் காட்சி, மனங்குளிர வைக்கும். ஸ்ரீ கணபதி, ஸ்ரீசக்கர ஆழ்வார், ஸ்ரீ இலக்குமி, ஸ்ரீ ஆஞ்சநேயம் ஆகிய தெய்வங்களை இந்த பாதையூடாக கற்கோவளப் பகுதி அடியார்கள் கடுகதியாக தூக்கிச் செல்வர்.

கோவிந்தா, கோபாலா, மாயவா, மதுசூதனா எனும் நாம ஒலி அவர் வாய்களிலிருந்து எழு...ும். இது பார்ப்போரைப் பரவசப்படுத்தும். அத்தோடு, கூன் கொண்டு வந்தவர் - தான் நிமிர்ந்தும் ஓடுமளவுக்குத் தீர்த்தக்கரை நோக்கி அவ்வளவு உற்சாகமாகச் செல்வர். வங்கக்கடற்கரைக்கு வல்லிபுர ஆழ்வாரைத் தூக்கிச் செல்பவர்கள் - வல்லி நாச்சியாரைச் தூக்கி வந்த வழி வந்தவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

பாக்குநீரிணையையும், வங்காள விரிகுடாவினையும் இணைத்திருக்கும் தீர்த்தக்கடலில் சக்கரத்தாழ்வாருக்கும், ஆஞ்சநேயருக்கும் அபிஷேக ஆராதனை செய்யப்பட்டு, படகில் ஏற்றப் பெற்று தீர்த்தமாடுவர். இதனைத் தொடர்ந்து அடியவர்கள் நோய் பிணி நீங்க, பாவங்கள் நீங்க - பக்த கோடிகளும் வங்கக்கடலில் தீர்த்தமாடிப் பாவ விமோசனடைவர். இந்தக் காட்சியைக்காண சமுத்திர அலைகள் வீசுமளவுக்கு அடியார் கூட்டம் இலட்சோபலட்சமாக ஒன்று கூடி பிரார்த்திப்பார்கள். நாளை ஆலய வீதியில் மேற்குப் புறம் அமைந்த கேணியில் பூரணமான தீரத உற்சவக் கிரிஷைகள் நடைபெற்று கேணித் தீர்த்தமும் இடம்பெறும்.

ஓம் நமோ நாராயணா

- க. அருட்செல்வன். பா. மணிக்குமார்.

கிடைக் ...ர்ணமி இதில ஆகிய ...களாக ...ிஷ்ணு ...ந்நாள். ...த்த ...ர்த்துப வல்லி ...த ஒரு ...சியின் ...தமாக ...ந்தா!! ...க்குத் ...சென்று ...ந்ததும் ...டுத்து

## பிரதம குருக்களின் அருளாசியுரை



பிரம்மஸ்ரீ
ச. க. சுதர்சணக் குருக்கள்



பிரம்மஸ்ரீ
ச. க. புருஷோத்தமக் குருக்கள்

கலிகாலத்தில் தர்மமான திருமணங்கள் நடைபெறா. குருமாணவ முறையும் இராது. எவனாக இருப்பினும் பலசாலி எவனோ அவனே எல்லாருக்கும் அதிபதியாவான், பிராமணன் எந்த வழியினாலும் தீட்சிதன் ஆவானே தவிர, சாஸ்த்திர விதிப்படி ஆவதில்லை, எவனுக்கு எந்த வாக்கியம் பிரியமோ அதுவே சாத்திர மாகும். கலியுகத்தில் புத்திக் குப்பயன் பொருள் சம்பாதிப்பதே அன்றி, ஆத்ம ஞானம் பயனா கக் கொள்ளப்படமாட்டாது!

விஷ்ணு புராணம்

வல்லிபுர மாயவன் அடியார்களே!

இன்றையதினம் மிகவும் பெறுமதியான புனிதமான நாளாகும். வங்கக்கடலலையில் மீனவதாரமாகத் தோன்றிய பெண்ணவள் மடியினில் வீழ்ந்து குழந்தையாகி சக்கர வடிவமான மாயவன், தனது சமுத்திரத்தில் பக்தர்கள் குழாம் சூழ தீர்த்தமாடுகின்றாள். ஆன்மாக்களின் பாவங்களைப் போக்குவதே தீர்த்தமாகும். பாவங்களை நாம் தீர்த்தோம்! பகவான் நமக்கு அருளுகின்றான்.

இன்று கற்கோவளம் கடற் கரையில் பல லட்சம் அடியவர் களுக்கு பகவான் வல்லிபுர மாயவனின் நல்லருளாசிகளை நாம் இதன் மூலம் தெரிவிப் பதில் பெருமகிழ்ச்சியடை கின்றோம். நாராயணனே துணை நமக்கு!!

நன்றி
சுபம்

ஸ்ரீ ஆழ்வார் பீடம்
ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமிகோவில்
துன்னாலை - புலோலி
பிரதம குருமார்கள்

வல்லிபுரம் வீற்றிருக்கும் மாயவனே
வடிவழகா எங்களுக்காய் அருள் புரிவாய்
சுவைத் தென்றல் கிறீம் ஹவுஸ்
சாரையடி, T.P. 0776319656 புலோலி தெற்கு, புலோலி

...போசென்றி
...ளகளோடு அமுதம் தின்றவனாம்
...சென்றே அன்று வளர்ந்தவனாம்
பருத்தித்துறை

சகலவிதமான கட்டடப் பொருள், மின் உபகரணக் கலவைகள்
விற்பனை நிலையம்
ராஜன் எலக்றிக்கல்ஸ்
பஸ்தரிப்பு நிலையம், பருத்தித்துறை

## ...ன் அறப்பணிகள்

...இருதய சத்திர சிகிச்சை, புற்றுநோய் சிகிச்சை, சிறுசீரகப்பை ...த்திய சிகிச்சைக்கான கொடுப்பனவுகளை வழங்கியமை.
...ன் குடிநீர்ப்பிரச்சினைக்காக உழவு இயந்திரமும், நீர்த்தாங்கியும் ...மை.
...ன எட்டுமாத காலத்துக்குள் பூர்த்தி செய்து ஒப்படைத்தமை.
...னவர்களுக்கு வெற்றிக்கிண்ணங்களை வழங்கியமை.
...ந்த 100 மாணவர்களுக்கு அவசிய கற்றல் உபகரணங்களை

சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனை நிலையம்
மற்றும்
உள்நாட்டு, வெளிநாட்டு தொலைத் தொடர்புக்கு
வே.மனோகரன்
மந்திகை புலோலி
T.P. 021 226 3277
021 226 3653, 060 221 2693, 060 221 2958

- ஆலயத்தினர் நடாத்தி...ும் கணினி நிலையத்தால் (20 ...ணினி) 500 மாணவர்கள் ...யிற்சி பெற்று வெளியேறினார்.
- அறநெறிப் பாடசாலையை இயக்கி வருகின்றனர். ...ந்த மாணவர்களுக்கு வாழும் ...லைப்பயிற்சி வழங்கப்பட்டன.
- ...ிட்டமிடப்பட்ட திருப்பணிகளாவன - வடக்கு, தெற்கு, ...ற்கு வாசல்களுக்கு கோபுரம் ...மைத்தல்.
- நவீன முறையில் பொங்...ல் மடம் அமைக்கப்பட்டன.
- பூங்காவனம் ஒன்றினை ...லயத்தின் மேற்கில் பூர்த்தி ...சய்தமை.

வல்லிக் கேணிக்குளத்தினருகே வள்ளல் சிரிக்கிறான்
அன்புகொண்டு வருபவர்க்கு ஒன்று உரைக்கிறான்.
விநாயகர் களஞ்சியம்
பிரதான வீதி, மருதடி T.P. 0776368376 பருத்தித்துறை

ராகுல சூரியன்ஸ்
தொலைத் தொடர்பு சேவை
24, பிரதான வீதி, T.P. 021 226 3011
021 226 3667 பருத்தித்துறை

லிங்கம் கிறீம் ஹவுஸ்
119, கஸ்தூரியார் வீதி, T.P. 021 222 7327 யாழ்ப்பாணம்
வண்ணத் தமிழ் சொல்லெடுத்துப் பாடுகின்றோம்
ஹரி ஹரனே எங்களுக்காய் அருள் புரிவாய்

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ
B 440 பருத்தித்துறை வீதி, நல்லூர் T.P. 021 222 2604
021 226 3459
சாவகச்சேரி வீதி, மந்திகை 077 7739673




# நியாப் மூலமாக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் மக்களிடம் கையளிப்பு

(கண்டாவளை)

கண்டாவளைப் பிரதேசத்தின் நாகேந்திர புரம் கிராமத்தில் நியாப் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 3 பொதுக்குடிநீர்க் கிணறுகள், வீதிகள், பொதுநோக்கு மண்டபம், புனரமைக் கப்பட்ட குளம் என்பன அந்தக் கிராம மக்களி டம் கடந்த சனிக்கிழமை கையளிக்கப்பட் டன.

இந்த நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நியாப் திட்ட பிரதேச இணைப் பாளர் கனகேஸ்வரி தலைமையில் நடை பெற்றது.

மங்கள விளக்கை கிளி நொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம், கிளி நொச்சி உள்ளூராட்சி ஆணையாளர் தனபால சிங்கம், ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை தருமபுரம் வலயப் பொறுப்பாளர் வி.சுடர்விழியன் ஏற்றிவைத்தார். வரவேற்புரையை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் வ.வைரமுத்து நிகழ்த்தினார். உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் க.தனபாலசிங்கம், தெய்வக் குழந்தை கள் அமைப்பின் தலைவர் பூராசா, கண்டா வளைப் பிரதேச செயலக நிர்வாக உத்தி யோகத்தர் இ.பத்மநாதன், ஓய்வுபெற்ற கிராம சேவகர் எஸ்.எஸ்.சின்னத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் சிறப்புரை நிகழ்த்தினார். நியாப் திட்ட உத்தியோகத்தர் அ. விஜய் கிருஸ்ணன் சமூக உணர்வூட் டல் பகுதியை சாந்த கோபிநாத், பிரதேச இணைப்பாளர் வே.கனகேஸ்வரி, மற்றும் கிராம அலுவலர்கள், மாதர்சங்கம், கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் பொதுநோக்கு மண்டபத் துக்கான பத்திரத்தை கிளிநொச்சி அரச அதிபர்- நாகேந்திரபுரம் மாதர் சங்கத்தலைவி யிடம் கையளித்தார். வீதிகள், குளம், என்ப வற்றின் பத்திரத்தை சமூக உணர்வூட்டல் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்டது. (இ)

## புதிய நிர்வாகத் தெரிவு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாவடி வலயத் தேசிய எழுச்சிப் பேரவை புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வட்டக்கச்சிப் பிரதேசப் பொறுபபாளர் சோழநிலவன் தலை மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளராக சி.சந்திர சேகரம், உபசெயலாளராக க.பற் குணசிங்கம், பொருளாளராக அ.யோகேஸ் வரன் உட்பட 15 பேர் கொண்ட உறுப்பினர் களும் தெரிவு செய்யப்பட்டனர். (09)

# வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் திலீபனின் இறுதி நாள் நிகழ்வுகள்

வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் தியாக தீபம் திலீபனின் 17 ஆம் ஆண்டு இறுதி நாள் நிகழ்வு- நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு ஆரம்ப மாகியது.

இந்த நிகழ்வின் தலைமை உரையை அரசியற்துறைச் சேர்ந்த இரா.ஜெயம் நிகழ்த்தினார். பொதுச்சுடரை தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பொன்னுத்துரை, வட்டக் கச்சி இராமநாதபுரம் வர்த்தக சங்கத்தலைவர் சிவலோகநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் ஈகச்சுடரை மாவடி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சந்திரன் ஏற்றிவைத்தார். திலீபனின் திருவுருவப்படத்துக்கு இராம நாதபுரம் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ராணி, புனர்வாழ்வுக் கழக உறுப்பினர் ரஞ்சினி ஆகியோர் மலர்மாலையை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பொன்னுத்துரையும், க.கி.வ.கூட்டுறவுச் சங்கத்தலைவர் ஆகியோர் உரையாற்றினர்.

இந்த உண்ணாவிரத நோன்பு நிகழ்வில் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கரைச்சி கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர், பொதுச்செயலாளர், பணியாளர்கள், தமிழர் புனர்வாழ்வு கழக உறுப்பினர்கள், வட்டக்கச்சி, இராமநாதபுரம் வர்த்த கர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவி களின் கவிதை, பாட்டு, பேச்சு என்பன இடம் பெற்றன.

மாலை 4 மணிக்கு வட்டக்கச்சி சந்தைப் பகுதியில் இருந்து இராமநாதபுரம் மகா வித்தியாலயம் நோக்கி திலீபனின திருவுரு வப்படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப பட்டு அங்கு மாலை நிகழ்வுகள் ஆரம்பமாகின. (இ,9)

## இரு தமிழ் இளைஞர் கைது

வவுனியா ஓமந்தை சோதனைச் சாவடி யில் வைத்து, கடந்த சனிக்கிழமை நண்பகல் இரு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து போலி தேசிய அடை யாள அட்டைகள் கைப்பற்றப்பட்டதையடுத்தே, இவர்கள் கைது செய்ததாக பொலி ஸார் தெரிவித்தனர்.

இவர்களின் பயணப் பொதிக்குள், உள் ளூர் துப்பாக்கி ரவைகள் சில கண்டெடுக்கப் பட்டதாகவும், பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவித்தன. நீதிமன்ற உத்தரவின் பேரில் இருவரும் தற்போது விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளனர்.

# கிளிநொச்சி நகரப் பகுதியில் வேக கட்டுப்பாட்டை பேண கோரிக்கை!

கிளிநொச்சி நகரப் பகுதி - அதனை அண் டிய பகுதிகளிலும் வாகனங்களை வேகமாகச் செலுத்திச் செல்கின்றனர். வேகமாக வாக னங்களைச் செலுத்துவோர் மீது கடும் நட வடிக்கை எடுக்கப்படுமென தமிழீழ காவல் துறையின் வீதிப் போக்குவரத்துக் கண் காணிப்புப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்-

கிளிநொச்சி நகரப் பகுதியிலும் அதனை அண்டிய ஏ-9 வீதியிலும் வேகக்கட்டுப்பாடு மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் என வரையறுக்கப்பட்டுள்ளது. எனினும் சகல வாகன சாரதிகளும் இதனைக் கடைப்பிடிக் காது வாகனங்களை மிக வேகமாக செலுத்து வதை அவதானிக்க முடிகிறது.

இதனால் நகரப்பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் வரையறுக்கப்பட்ட வேகத்தில் வாகனங்களைச் செலுத்தினால் மட்டுமே விபத்துக்களைத் தடுக்க முடியும். இதனை கருத்திற்கொண்டு சகல வாகன சாரதிகளும் வாகனங்களை குறித்த வேகத் தில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின் றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# மழலைகள் கணினி பூங்கா கிளிநொச்சியில் திறப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ மாணவர் அமைப்பும், தமிழ் தொழில நுட்ப ஒருங்கமைப்பும் இணைந்து நடத்தும் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் இலவச மழலைகள் பூங்கா- நேற்றுமுன்தினம் காலை பத்து மணிக்கு கிளிநொச்சி பரவிப்பாஞ்சானில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனால் திறந்து வைக்கப் பட்டது.

இந்த நிகழ்வு தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் நளன் தலைமையில் நடை பெற்றது. லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய தலைவர் சொக்கலிங்கம, ஸ்கந்த தேவா தமிழ்த் தகவல் தொழிலநுட்ப நிதிப் பணிப்பாளர் ஜெயதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இலவச மழலைகள் திறன் விருத்திக் கழக பெயர் பலகையை லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய தலைவர் சொ.கருணைலிங்கம் திறந்து வைத்தார். மேஜர் முரளி இளையோர் திறன் விருத்திக் கழகப் பெயர்ப பலகையை தமிழீழ காவலதுறை சீர்திருத் தப்பாடசாலை பொறுப்பாளர் நரேன திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை - லணடன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதிய உறுப்பினர் ஸ்கந்ததேவா ஏற்றி வைத்தார்.

## பணிப்புரை விடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - கனகாம்பிகைக் குளத்தி லிருந்து மேலதிக நீர் வெளியேறும் வாய்க் காலின் இருமருங்கிலும் தற்போது நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகிறது. இதனால் இனிவரும் காலங்களில் குளத்தில் இருந்து வெளியேறும் நீர் தேங்கி மக்கள் குயிருப்புக் களைப் பாதிக்கக் கூடிய சூழ்நிலை உரு வாகியுள்ளது.

இந்த ஆபத்தைக் கருத்தில் கொண்டு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி அரச அதிபர் கரைச்சிப் பிரதேச செயலருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

# காய்ச்சல் நோய் தொடர்பாக விழிப்புணர்வு கருத்தரங்கு

(புளியங்குளம்)

புளியங்குளம் பகுதியில் நெருப்புக்காய்ச் சல் நோய் பரவிவருகின்றது. இதனைத் தடுப் பதற்கான தீவிர நடவடிக்கைகளில் தமிழீழ சுகாதார சேவையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் அண்மைக் காலமாக நெருப்புக்காய்ச்சல் நோயின் தாக்கம் அதி கரித்து வருகின்றது. இந்த நோயை முற்றாக கட்டுப்படுத்தும் நோக்கில், சுகாதார சேவையி னர் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

முதற் கட்டமாக கடந்த வெள்ளியன்று புளியங்குளம் முத்துமாரி நகர்ப்பகுதி - நெருப் புக் காய்ச்சல் நோய் தொடர்பான விழிப்புணர் வுக் கருத்தரங்குகள் நடைபெற்றன. இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில், நெருப்புக்காய்ச் சல் தொடாபாகவும், இந்த நோய் பரவுகின்ற முறைகள் பற்றியும் இந்த நோய் பரவாது தடுக்க வேண்டியதன் முக்கியத்துவம், தடுக் கும் முறைகள் பற்றியும் தமிழீழ சுகாதார சேவைகள பொறுப்பாளர் நாயகன் மக்களுக்கு விளக்கமளித்தார்.

இதே வேளை நெருப்புக்காய்ச்சல் நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக அன்று மாலை தொடக்கம் இரவு வரை ஒலி பெருக்கிகள் மூலமாக பழைய வாடி, கல்மடு நகர்,புளியங்குளம் உட்பட பல இடங்களிலும் நெருப்புக்காய்ச்சல் நோய் தொடர்பான அறி வுறுத்தல்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

மழலைகள் கணினிப் பூங்கா திறப்பு






மழலைகள் கணினிப் பூங்காவில் சிறார்கள்

இளையோர் திறன் விருத்திக் கழகத் திறப்பு.



நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**
சான்றவர் சான்றாண்மை குன்றில் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை
*திருக்குறள்*

# நமது நோக்கு

## இனப்பிரச்சினையும், இறுக்கப்போக்கும்...

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான முயற்சிகளில் ஜனாதிபதி எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு வெளிநாடுகளின் ஆதரவும், வரவேற்பும் பெருமளவில் இருப்பதாக அவர் மிகவும் நம்புவதாகவும், இதன்காரணமாக அவர் அமைதி முன்னெடுப்புத் தொடர்பாக இப்போது எழுந்துள்ள தீர்மானத்தில் தொடர்ந்து இறுக்கமாகவும், கடினமான போக்கைக் கடைப்பிடிப்பவராகவும் இருக்கப்போகிறார் என்றும், முக்கிய இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக ஊடகச்செய்தி ஒன்று விபரித்துள்ளது.

இது ஒன்றும் ஆச்சரியமான - அதிர்ச்சியூட்டும் விடயமேயல்ல.

ஜனாதிபதி எந்தக் காலத்திலும் சமாதானம் குறித்த விடயங்களில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் கூடிய தேசிய அக்கறையின் பேரிலான நெகிழ்வுப்போக்கெதனையும் கடைப்பிடித்ததாக வரலாறு கிடையாது. வெறுமனே பேச்சுக்கு, பரபரப்பாக அறிக்கைகளை விட்டும், கருத்துக்களைக் கூறியும், தேசிய ரீதியிலும், சர்வதேச மட்டத்திலும் தன்னை ஒரு அமைதியை விரும்பும் நியாயப்போக்குக்கொண்ட சமாதான அபிமானியாகக் காட்டிக்கொள்வதில் அவர் அக்கறை எடுத்துக்கொண்டதைப் போன்று யதார்த்தத்தில் இயங்கியதே கிடையாது.

பண்டாரநாயக்க பரம்பரை பாரம்பரியத்துக்குரிய சகல பௌத்த சிங்கள பேரினவாத குணாம்சங்களும் கச்சிதமாக உள்ளடங்கிய ஒருவராகவே ஜனாதிபதி தன் செயற்பாடுகள்மூலம் இன்றுவரை தன்னை இனங்காட்டி வந்துள்ளார்.

அவரின் இந்தப் பாரம்பரியப் பண்பானது இனப்பிரச்சினையிலும் எந்தவிதமான விட்டுக்கொடுப்பையோ, நெகிழ்வுப்போக்கையோ கடைப்பிடிக்க அவரை அனுமதிக்கப் போவது கிடையாது. உண்மையிலேயே அவர் தமிழ்மக்களின் பிரச்சினைகளை அவரே தனது வாக்குமூலமாகக் கூறுவதுபோன்று, முழுமையாக உணர்ந்துள்ள - அதனை வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள, அதுமட்டுமல்லாது அப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டுமென்பதில் பற்றுறுதிகொண்ட ஒருவராக இருந்திருப்பாரேயானால் 1995 இல் அவர் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்று அதிகார வலிமைமிக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றவேளையில், இனப்பிரச்சினைக்கான நியாயமான தீர்வொன்றினை எட்ட மிகப்பெரிய வாய்ப்பொன்று அவருக்குக் கிடைத்திருந்தவேளையில் அவர் நிறைவேற்றியிருந்திருக்கமுடியும்.

அப்படி அவர் பரந்த மனத்துடன், நியாய உள்ளத்துடன் மனித உரிமைகளை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளும் உணர்வுடன் நடந்துகொண்டிருப்பாரேயானால் இன்று சமாதானத் தீர்வுக்கு வயது கிட்டத்தட்ட ஒரு தசாப்தத்தை எட்டும் நிலையில் இருந்திருக்கும்.

ஆனால், அவர் சமாதானத்தை சமாதான வழிமுறைகளின் மூலம் அடையும் வழியைத் தவிர்த்துவிட்டு-அதிகாரப் பரவலாக்கல் என்ற புதிய அரசியல் வியூகம் ஒன்றின் மூலம் தமிழ்மக்களை ஏமாற்ற முனைந்ததுடன், சமாதானத்தை யுத்தம் மூலம் அடையும் போர்வியூகம் ஒன்றிற்கும் வழிவகுத்ததுடன் இலங்கையை வரலாறுகாணாத இழப்புகளுக்கும், நெருக்கடிகளுக்கும், பின்னடைவுகளுக்கும் இட்டுச்சென்றார் என்றால் அது மிகையில்லை.

இன்று இலங்கை சந்தித்துவரும் அத்தனை துயர்கள், கஷ்டங்கள் அனைத்திற்கும் அவரின் 7 ஆண்டுகால 'சமாதானத்திற்கான யுத்தமென்ற' போர்நடவடிக்கைகளின் தாக்கங்களே காரணமாகும்.

அப்போது அவரது இந்தப் போர் நடவடிக்கைகளுக்கு இப்போது அவரது நிலைப்பாட்டை ஆதரிக்கும் - வரவேற்கும் நாடுகளும்கூட பின்புல உதவிகளை வழங்கியது ஒன்றும் ரகசியமான விடயமல்ல.

இப்போது அதே நாடுகள்தான் சமாதானத்தை வலியுறுத்தியும் வருகின்றன. ஜனாதிபதியின் இன்றைய நிலைப்பாடு என்பது அவரது முழுமையான சுயாதீனச் சிந்தனையின் அடிப்படையில் எடுக்கப்பட்ட ஒன்றல்ல. அவருக்குப் பின்னால் அணிதிரண்டு நிற்கின்ற பேரினவாத - சமாதான விரோத சக்திகளின் கருத்தியல் அழுத்தத்திற்கு உட்பட்டு அதிலிருந்து தப்பிக்கவேமுடியாத நிலையில் அவர் எடுத்துள்ள நிலைப்பாடே இதுவாகும்.

எனினும்கூட அவருக்கு இதில் உடன்பாடு இருக்கவே செய்கிறது. அது அவரது பாரம்பரிய குணாம்சத்தின் அடிப்படையில் வந்த ஒன்றேயாகும்.

எனவே அவரது சமாதானம் தொடர்பான இறுக்கமான நிலைப்பாடென்பது சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டே காலத்தை இழுத்தடித்து தமிழ்மக்களை ஏமாற்றும் மூலோபாயத்தை அடிப்படையாகக் கொண்டதேயாகும் என்பதை சர்வதேசசமூகம் இதுகாலவரைக்குள் தெளிவாகப்புரிந்து கொண்டிருக்கவேண்டும்.

அப்படிப் புரிந்து கொண்டபின்னரும் ஜனாதிபதியின் தந்திரோபாய பேச்சுக்களில் மயங்கி, அவரது நிலைப்பாட்டுக்கு பக்க ஆதரவாக எவரும் இருந்தால் அவர்களும் நீதியான சமாதானத்திற்கு நியாயபூர்வமாக ஆதரவு தருபவர்களாக இருக்கப்போவதும் கிடையாது.

இந்தநிலையில் ஜனாதிபதி தனது சமாதானம் தொடர்பான நிலைப்பாட்டுக்கு சர்வதேசநாடுகள் ஆதரவை வழங்கும் என நம்பி இறுக்கமான தளர்வற்ற பழைய தனது நிலைப்பாட்டை தொடருவாரேயானால் அவர் மீண்டும் சமாதானத்தை யுத்தமூலம் கொண்டு வரும் முயற்சியில் தீவிரம் காட்டுகிறார் என்றே அர்த்தம் கொள்ளவேண்டி வரும்.

## நாடும் நடப்பும்

*செய்தி:-* சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. உறவு பிரிக்கவே முடியாத ஒன்று என்கிறார் மங்கள சமரவீர.



# கல்விசார் தொழிற்சங்கங்கள் இணைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தத் தீர்மானம்!

(கொழும்பு)

கல்விசார் ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசுககு அழுத்தம் கொடுக்கும் வகையில், பதினான்கு கல்விசார் தொழிற்சங்கங்கள் இணைந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை எதிர்வரும் ஐந்தாம் திகதி கொள்ளுப்பிட்டியில் நடாத்த முடிவு செய்துள்ளன.

ஆசிரியர்கள் உட்பட, கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினரதும், பல்வேறு தொழில் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையில் உள்ளதனால் அவற்றைத் தீர்ப்பதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுப்பதுடன், இன்று அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடிய வகையில் உடனடியான சம்பள உயர்வு ஒன்றை வழங்கும்படி அரசை வற்புறுத்துவதும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியினது நோக்கம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் வழங்க இருக்கும் சம்பள உயர்வை எதிர்பார்த்து இப்போதுள்ள வாழ்க்கைச் செலவை எம்மால் சமாளிக்க முடியாதுள்ளது. எனவே அரசு ஊழியர்களுக்கு மாதாந்த இடைக்கால கொடுப்பனவாக மூவாயிரம் ரூபாவை வழங்குமாறு இந்தப் பேரணிமூலம் தாம் அழுத்தம் கொடுக்க தொழிற்சங்கம் ஒன்றினது பிரதிநிதி தெரிவித்தார். ஆசிரியர்களது பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாத அதிகார வர்க்கத்தினர் ஆசிரியர் தினத்தைப் பயன்படுத்தி ஆசிரியர்களை முட்டாளாக்கும் தினமாக மாற்றுவதற்கே பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் இலவச மதிய உணவு வழங்குதல், வரவு செலவுத்திட்டத்தின் போது கல்விக்காக பாரிய தொகை ஒன்றை ஒதுக்குதல், அமைதிப் பேச்சுவார்த்தையை உடனடியாக ஆரம்பித்தல், அரசு சுற்று நிருபங்களை மும்மொழிகளிலும் ஒரே தடவையில் வெளியிடல், இலவசக் கல்வியைச் சீர்குலைப்பதைத் தவிர்த்தல், கல்வி அமைச்சில் தமிழ் கல்வி அபிவிருத்திக்கான அலகு ஒன்றை ஸ்தாபித்தல், தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக் குறையை உடனடியாக நிவர்த்தி செய்தல் போன்ற கோரிக்கைகள் உட்படப் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட இருப்பதாக இந்த ஆர்ப்பாட்டப் பேரணியை ஏற்பாடு செய்துவரும் கல்விச் சேவை ஊழியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு அறிவித்துள்ளது. (31)

## ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்க பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடல்

அனைத்து ஆயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளுக்கான சந்திப்பொன்று பிரதேச உள்ளூராட்சி அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஏற்பாட்டில் இடம் பெறவுள்ள இந்தச் சந்திப்பு நிகழ்வில் யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் கடமைபுரியும் அனைத்து சித்த ஆயுர்வேத உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கீழ் இயங்குகின்ற அனைத்து ஆயுர்வேத வைத்தியர்களுக்கான இந்தச் சந்திப்பின் மூலம், பிரதேச ரீதியாக இயங்குகின்ற ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எதிர்காலத்திட்டங்கள், வளர்ச்சிகள் போன்ற பல விடயங்கள் ஆராயவுள்ளதாக பிரதேச உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# முறைசாரா போதனாசிரியர்களுக்கு சேவைக்காலக் கருத்தரங்கு

யாழ்.கல்வித் திணைக்களத்தின் முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சி நெறியினுடைய எழுத்தறிவூட்டல் போதனாசிரியர்களுக்கான சேவைக்காலக்கருத்தரங்கு ஒக்ரோபர் 4 ஆம் 5ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

வலயக்கல்வி அலுவலகத்தில், இந்தத் தினங்களில் காலை 9.30 மணி தொடக்கம் பகல் 12.30 மணிவரை இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் தொழிற்திறன் பரீட்சை வினாத்தாளின் மாதிரி விளக்கம், உள்ளகப் பயிற்சியாளர்களுக்கான பரீட்சை பாடத்திட்ட நிறைவேற்றம், கண்காட்சி தொடர்பான விடயங்கள், விடைத்தாள் மதிப்பீடு போன்ற விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் பங்குபெறாத பட்சத்தில் போதனாசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்குதல் இடைநிறுத்தப்படும் எனவும், அத்தோடு கருத்தரங்கின்றி பயிற்சி நடைபெறாது என்றும், இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வோர் உள்ளகப் பயிற்சியாளர்கள் செயற்பாட்டு ஆவணங்களைக் கொண்டு வருவதோடு, அவர்கள் ஆசிரியர்களுக்கான ஆசிரியத்துவ உடையிலேயே வரவேண்டும் என யாழ்.வலயக்கல்விப்பணிப்பாளர் வலியுறுத்தியுள்ளார்.

## விபுலானந்தர் நினைவுப் போட்டிக்கு 300 இற்கும் அதிகமான ஆக்கங்கள்

"விளக்கு" மாதாந்த சஞ்சிகையின் சுவாமிவிபுலானந்தர் நினைவு எழுத்தாக்கல் போட்டிக்கென, பலர் தங்கள் ஆக்கங்களை அனுப்பி வைத்துள்ளதாக யாழ்.மாவட்ட கல்விப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்.

ஆசிரிய தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட கல்விப்பேரவையின் வெளியீடான விளக்கு சஞ்சிகையினர் நடாத்தும் எழுத்தாக்கல் போட்டிக்கே இவ்வாறு பலர் தங்கள் ஆக்கங்களை அனுப்பியுள்ளனர்.

இதுவரை முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, வவுனியா, மட்டக்களப்பு யாழ்.மாவட்டங்களைச் சேர்ந்த முன்னூறுக்குமதிகமான ஆக்கங்கள் தமக்குக் கிடைத்துள்ளதாகவும், தொடர்ந்து ஆக்கங்கள் வந்து சேர்ந்தவண்ணம் உள்ளதாக கல்விப் பேரவையினர் தெரிவித்தனர்.

இவ்வாக்கல் போட்டியில் வெற்றியீட்டும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்படவுள்ளதாகவும், எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதியளவில் இவர்களுக்கான பரிசளிப்புவிழா இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## அறநெறிப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன.

இந்தப் பயிற்சிநெறிகள் தொடர்பான விபரங்கள் அறநெறிப் பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அது தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெறாதவர்களைத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்.மாவட்ட இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்கள உதவி இயக்குனர் கேட்டுள்ளார்.

தெல்லிப்பளை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய், பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு, இன்று யா.இராமநாதன் கல்லூரி மண்டபத்திலும்.

ஊர்காவற்துறை, வேலணை, நெடுந்தீவு, காரைநகர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை ஆரியர்களுக்கு எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களிலும், தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் பயிற்சி அடுத்தமாதம் 16ஆம் திகதி சனிக்கிழமையும், யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி, பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் பயிற்சி அடுத்த மாதம் 30 ஆம் திகதியும் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெற்குத் திசையினிலே... - கொழும்பிலிருந்து இந்திரஜித்

# சமாதானத்தின் அடிப்படையில் இலங்கை அரசியல் நகர்வுகள்!



அனைத்துச் சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அடிப்படையில் இலங்கையில் சமாதானம் அமையவேண்டும் என்பதை இந்த நாட்டிலுள்ள சிங்கள மக்களைவிட தமிழ் மக்களே அதிகமாக விரும்புகின்றனர். ஆனால், அதற்கான ஏற்பாடுகள் இதுவரை ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்களால் செய்யப்படாமை காரணமாகவே இன்று நாடு வெளிநாடுகளிடம் கையேந்தி நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

சொந்த நாட்டின் பிரச்சினையைத் தாமே தீர்த்துக்கொள்ள முடியாமல் இலங்கையின் அரசாங்கங்கள் வெளிநாடுகளை நாடியதன் மூலம், ஏற்கனவே நாட்டின் இறைமை - அடிப்படையிலேயே பாதிக்கப்பட்டுவிட்டது என்றே கூறவேண்டும். இதற்குள் இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு நாட்டின் இறைமையைப் பாதிப்பதாகக் கூறுவது வேடிக்கையான விடயமாகும்.

இன்று நாடு பாரிய பொருளாதார சிக்கலுக்குள் சிக்கித் தவிக்கிறது. வரவுக்கு மேல் செலவு என்ற நிலையில் முழுமையாக கடனை நம்பியே நாட்டை கொண்டு செல்லும் நிலைக்கு அரசாங்கம் வந்துள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட தகவல் ஒன்றின் அடிப்படையில் தற்போதைய இலங்கை அரசாங்கம், தற்சமயம் 1000 மில்லியன் டொலர்களை அமெரிக்காவிடம் இருந்து கடனாகப் பெற்று டொலராகவே கடனையும் வட்டியையும் செலுத்திவருகிறது.

நாட்டில் டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி நாளுக்கு நாள் குறைந்து செல்லும் நிலையில், இந்த ஏற்பாடுகள் நாட்டு மக்களின் பொருளாதாரத்தைப் பாதாளத்திற்குத் தள்ளிச்செல்லும் நடவடிக்கை என, ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது. ஆனால், அதே ஐக்கிய தேசியக் கட்சி தனியார் மயம் என்ற ரீதியில் நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு விற்பனைசெய்து வந்ததாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் குற்றம் சுமத்துகிறது. இது ஒரு குறிப்பிட்ட வருடங்களுக்கு நாட்டை வெளிநாடுகளிடம் அடகு வைப்பதைப் போன்றது என்பதுடன், குறிப்பிட்ட வளங்கள் ஏதோ ஒரு நாட்டின் பிடியில் இருந்து மீட்கப்படும் போது அந்த வளங்கள் நிச்சயமாக சுரண்டப்பட்ட வளங்களாகவே இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

முதலாளித்துவ பொருளாதாரத்தில் ஏனைய நாடுகள் தனியார்மயத்துக்கு முதலிடம் வழங்கி வருவதைச் சுட்டக்காட்டி, இலங்கையும் அதன் பின்னால் செல்வது யதார்த்தமானதா என்பது சிந்திக்க வேண்டியது ஒன்று. ஏனைய நாடுகளைப் பொறுத்த வரையில், அங்கு அரசாங்கம் தனியார்மயம் என்ற ஏற்பாடுகளைத் தமது நாட்டின் மக்கள் மத்தியிலேயே மேற்கொள்கிறது. எனவே, அங்கு நாட்டின் வளங்கள் சுரண்டப்படும் வாய்ப்புகள் குறைந்தே காணப்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை இங்கு தனியார் மயம் என்பது முழுமையாக வெளிநாட்டு முதலீடுகளை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது. நாட்டை இதுவரை ஆட்சி செய்து வரும் இரண்டு தேசிய கட்சிகளும் இந்த தனியார் மயத்திட்டம் தொடர்பாக ஒன்றை ஒன்று குற்றம் சுமத்துகின்ற போதும், ஒரு கட்சி ஆட்சியில் இருக்கின்ற போது மேற்கொள்கின்ற தனியார்மயத் திட்டங்களை, மறுகட்சி ஆட்சிக்கு வரும்போது மாற்றங்கள் எதுவுமின்றி செயற்படுத்தி வருவதை மக்கள் நன்கறிவர், குறிப்பாக நீர்முகாமைத்துவத் திட்டமானது தனியார்மயப்படுத்தப்படப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருக்கும்போது, இன்றைய அரசாங்க கட்சி குற்றம் கூறியது.

ஆனால், இன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் அச்சுறுத்தலையடுத்து அந்த திட்டத்தை முழுமையாக செயற்படுத்த கடமைப்பட்ட நிலைக்கு உள்ளாகியுள்ளது. இவ்வாறான உதாரணங்களைக் கொண்டு மக்கள் மாத்திரமே கட்சி அரசியலுக்கு அடிமையாகியுள்ளார்கள் என்பதை விளங்கிக் கொள்ளமுடியும், இந்தநிலையில் கட்சிகளை பொறுத்தவரை அவை என்றும் ஒரு வழிக் கொள்கையை மேற்கொண்டு வெளிநாடுகளையும், நிதி நிறுவனங்களையும் திருப்திப்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பது மாத்திரமே உண்மையான விடயமாகும்.

நாட்டின் சமாதான நகர்வுகள் இன்னமும் மந்த கதியிலேயே நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நாடு சமாதானத் தீர்வைக் காணும் வரையில், நாட்டின் பொருளாதாரம் சீரழிந்த நிலையிலேயே இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

ஜனாதிபதியின் தற்போதைய நகர்வுகள் ஒவ்வொன்றும் சமாதான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கும் என்ற எண்ணத்தில் சந்தேகத்தை தோற்றுவித்து வருகின்றன. நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பாக அவர் வெளியிட்டு வரும் கருத்துக்கள் முன்னுக்கு பின் முரணானவை என்பதைப் பலரும் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்துள்ளனர். தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி யோசனை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் எண்ணத்தை அவர் முன்னர் வெளியிட்டு வந்தபோதும், பின்னர் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்ததன் காரணமாக அந்த கொள்கையை கைவிடும் நிலைக்கு வந்தார். இறுதித் தீர்வு தொடர்பிலேயே தமது அரசாங்கம் பேசத் தயாராகவுள்ளதாக அவர் கூறியபோது, முழுமையாக இலங்கையின் சமாதான முயற்சிகள் முடக்கப்பட்ட நிலைக்கு வந்து விட்டநிலை தோன்றியது.

போர் ஒன்று எப்போது ஆரம்பிக்கும் என்ற கேள்வி மக்கள் மத்தியில் தோன்றி விட்டது. எனினும் அது பின்னர் வந்த காலப்பகுதியில் நோர்வேயின் தலையீட்டினால் தவிர்க்கப்பட்டது. என்றாலும் தற்போதும் சமாதான முயற்சியை ஜனாதிபதி எப்போது ஆரம்பிப்பார் என்பதை அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். சமாதானப் பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரம் சீர்பெறும் என்பதை நாட்டு மக்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள். எனவே, நாடடு மக்கள் தொடந்தும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கப்படுவதில் தாமதம் காட்டப்பட்டு வருவதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அது சிலவேளைகளில், தற்சமயம் ஐக்கிய தேசியக் கட்சி ஆரம்பித்துள்ள அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தில் பங்கெடுப்போரின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வாய்ப்பை ஏற்படுத்தி விடும், இது எவராலும் தூண்டப்படாத மக்களின் சுய சிந்தனைப் போராட்டமாக மாறிவிடக்கூடும்.

> **ஐக்கிய தேசிய கட்சி இன்று நாட்டில் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே ரோக்கி யோவில் இணங்கிக்கொள்ளப்பட்ட 4.5 கோடி டொலர் நிதியுதவி கிடைக்கும் என கூறி வருகிறது. ஆனால், சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாத நிலையிலேயே இன்று அந்த நிதியுதவிகள் நாட்டுக்குவர ஆரம் பித்துவிட்டன என்பதே அமைச்சர் மங்கள சமரவீரவின் கூற்றாக அமைந்திருந்தது**

இதனை அரசாங்கம் உணர்ந்துள்ள போதும் கட்சி அரசியலுக்குள் இருந்து இன்னும் விடுபடாமையால், நாட்டு மக்களின், மற்றும் சர்வதேசத்தின் விமர்சனங்களுக்கு உள்ளாகி வருகிறது. அதனை சமாளிப்பதற்காகவே அண்மையில் அமைச்சர் மங்கள சமரவீர கூறிய கருத்து அமைந்துள்ளதாக் நோக்கப்படுகிறது. (ஐக்கிய தேசிய கட்சி இன்று நாட்டில் சமாதானப் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே ரோக்கி யோவில் இணங்கிக்கொள்ளப்பட்ட 4.5 கோடி டொலர் நிதியுதவி கிடைக்கும் என கூறி வருகிறது. ஆனால், சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படாத நிலையிலேயே இன்று அந்த நிதியுதவிகள் நாட்டுக்குவர ஆரம்பித்துவிட்டன என்பதே அமைச்சர் மங்கள சமரவீரவின் கூற்றாக அமைந்திருந்தது)

இது, நாட்டு மக்கள் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டால் மாத்திரமே இலங்கையின் பொருளாதாரம் சீராகி, பொருட்களின் விலையுயர்வுகள் கட்டுப்படுத்தப்படும் என, தற்சமயம் நினைத்துக் கொண்டிருப்பதை மாற்றும் ஒரு அரசியல் தந்திரமாகவே எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இது உண்மையாக மக்கள் மனதில் பதியுமாக இருந்தால் சமாதானத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஒன்றாகவே அதனைக் கருதமுடியும்.

இதேவேளை, ஜனாதிபதி அமெரிக்காவில் கூறியுள்ள சில கருத்துக்கள் சமாதானம் தொடர்பாக - சமாதான விரும்பிகள் மத்தியிலும், சமாதான எதிரிகள் மத்தியிலும் சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு - ஜனாதிபதியின் கருத்துக்கள் போர் ஒன்றுக்கு அவர் அழைத்து செல்கிறார் என்ற விமர்சனத்தை தெரிவித்துள்ளது. ஆனால் ஜாதிக ஹெல உறுமய - ஜனாதிபதியின் கருத்துக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் தன்மை பொருந்தியது எனத் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துக் கொள்வதற்குத் தாம் தயாரென ஜனாதிபதி நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜான் பீற்றர்ஸனுக்கு தெரிவித்த செய்தி உண்மையாக நடைமுறைப்படுத்தப்படுமானால் நாட்டில் விரைவில் சமாதான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் என அனைவரும் நம்பலாம். ♣

---

புலிகள் பேசவர மறுப்பதாக

# ஐ.நாவில் ஜனாதிபதி ஆற்றிய உரைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனம்



விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு மறுப்புத்தெரிவித்து வருவதாக, ஜனாதிபதி சந்திரிகா ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் ஆற்றிய உரையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது குறித்து கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையின் விபரம் வருமாறு:

ஏறத்தாழ ஆறு வருடங்களாகப் பேச்சுவார்த்தை நடைமுறையின் அனுசரணையாளராக நோர்வே அரசாங்கம் பங்காற்றி வந்துள்ளது. ஏறத்தாழ 18 மாதங்களுக்கு முன்பு பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொண்ட விடுதலைப் புலிகள், தற்போது பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்புவதற்கு மறுப்புத்தெரிவித்துவரும் நிலையில்கூட, நோர்வேயின் தீவிர பங்களிப்புடன் நாம் சமாதான நடைமுறையை முன்னெடுத்துள்ளோம் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்து உண்மைக்குப் புறம்பானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு, ஜனாதிபதியுடன் நடத்திய சந்திப்பின்போது - விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் சில அம்சங்கள் குறித்து, தமது எதிர்ப்பைத் தெரிவித்த ஜனாதிபதி, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகள் மீது பேச்சுக்களை ஆரம்பிக்கத் தாம் தயாராக இருப்பதாக மிகத்தெளிவாகத் தெரிவித்திருந்தார்.

இந்த உறுதிப்பாட்டைச் செயற்படுத்துவதற்கு அரசாங்கம் இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

அரசாங்கத்தினுள் ஜனாதிபதியின் அரசியற்கூட்டுப் பங்காளியாக இருக்கும் ஜே.வி.பி சமாதான நடைமுறை மற்றும் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகள் ஆகியவற்றுக்கான எதிர்ப்பை உச்சத்துக்குக் கொண்டுவந்துள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகளின் அடிப்படையில் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக திரும்பத் திரும்பக் கூறிவரும் விடுதலைப் புலிகள், இந்த முன்மொழிவு தொடர்பாக அரசாங்கம் - பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரும் எந்த முன்மொழிவுகளையும் பரிசீலனைக்கு எடுக்கமுடியும் என்று தெரிவித்துள்ளனர்.

இதன்பின்னணியில் - பேச்சுவார்த்தை மேசைக்கு மீண்டும் வருவதற்கு விடுதலைப் புலிகள் மறுக்கின்றனர் என்று ஜனாதிபதி தெரிவித்திருப்பது உண்மையான நிலையைப் பிரதிபலிப்பதாக அமையவில்லை. இது துரதிஷ்டவசமானது.

தெளிவற்ற தன்மை அவரின் அரசாங்கத்தினுள் காணப்படும் முரண்பாடுகள் - பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்குத் திட்டவட்டமாக நடவடிக்கை எடுப்பதற்கு, இயலாத் தன்மைதான் சமாதான நடைமுறையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பிரதான முட்டுக் கட்டையாக உள்ளது.

மோதலால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் விரிவான அபிவிருத்தி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்ற ஜனாதிபதியின் கூற்றுக் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஐயம் எழுப்புகின்றது.

வடக்கு - கிழக்கில் இழப்புகள், துன்பங்களுக்கு ஆளாகியுள்ள தமிழ்மக்களுக்கு மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி உதவியை ஓரளவாவது சர்வதேச சமூகம் வழங்குகின்றது என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்கிறது.

அதேவேளை - வடக்குக் கிழக்கில் இடம்பெயர்ந்த இலட்சக்கணக்கானோர் விரிவான செயற்திட்டம் ஒன்றின் கீழ் தங்களை மீளக்குடியமர்த்தவும், புனர்வாழ்வளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்புடன் தங்களின் வீடுகளுக்கு வெளியே தொடர்ந்தும் துன்பமடைந்து வருகின்றார்கள். இந்தப் பணியும், அழிந்துபோன வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்பும் பணியும், வடக்கு - கிழக்குக்கு என்று முறையாக உருவாக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் மூலம் மாத்திரமே நிறைவேற்ற முடியும்.

வார்த்தைஜால அறிக்கைகளைத் தவிர்த்து பேச்சுவார்த்தையின் வெற்றியை உறுதிசெய்யக்கூடிய அர்த்தமுள்ள கருத்துடன்பாட்டை கட்டியெழுப்பி பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான மனத்திண்மையுடன் கூடிய செயற்பாட்டில் அக்கறை செலுத்தும்படி ஜனாதிபதியை நாம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

வேறு எவரிலும் பார்க்க வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்மக்கள் மோதலுக்கு அமைதித் தீர்மானம் ஒன்றைக் காண வேண்டும் என்றே விரும்புகின்றனர்.

கூட்டமைப்புக்குக் கொடுத்த உறுதிமொழிக்கு இணங்க, தற்போது கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை முன்மொழிவுகள் மீது சமாதானப் பேச்சுக்களை விடுதலைப் புலிகளுடன் ஆரம்பித்து சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்ல ஜனாதிபதியைத் தமிழ்மக்கள் பலமாக வலியுறுத்துகின்றனர்.

சமாதான நடைமுறை பற்றித் திரிவுபடுத்தப்பட்ட தகவல்களைத் தெரிவிப்பதற்கு அரசாங்கங்களின் தலைவர்கள் பங்குபற்றிய ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தை ஒரு மேடையாக ஜனாதிபதி பயன்படுத்தியுள்ளார் என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்ட விரும்புகிறது.

சமாதான நடைமுறையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி எண்ணியிருக்கும் நடவடிக்கைகள் பற்றி தெளிவாகக் கூறப்பட்டிருப்பது, நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்புவதற்கு பெரிதும் பங்களிக்க முடியும். தற்போதைய இக்கட்டான நிலை தொடரக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழுத்திக் கூறுகின்றது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ☆

# அழகின் வயது 350




# ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தில் அமெரிக்கா விமானத் தாக்குதல்!

## ஐவர் பலி; 45 பேர் காயம்

ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள சதார் நகரம் மீது அமெரிக்கப் படையினர் நடத்திய விமானத் தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டதுடன், 45 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் - ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நகரம் மீதே நடத்தப்பட்டது.

எதிரிகளின் நிலைகள் மீதே தாம் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கப்படையினர் தெரிவித்தனர்.

இதேவேளை - ஈராக்கின் வட பகுதி நகரான மொசூல் பகுதியில் வீதியோரம் இடம்பெற்ற கார்க் குண்டுத் தாக்குதலில் ஈராக்கிய தேசிய காவல்படையினர் மூவர் கொல்லப்பட்டனர். படையினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளையில் இந்தத் தாக்குதல் நடைபெற்றதாகவும் இந்தச் சம்பவத்தில் பொதுமக்கள் மூவரும் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், ஈராக் தலைநகர் பாக்தாத்திலுள்ள பொலிஸாரின் பயிற்சி நிலையம் மீது இஸ்லாமிய தீவிரவாதிகள் மோட்டார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் வன்செயல்கள் ஈராக்கின் ஸ்திரத்தன்மையை மிகவும் மோசமான நிலைக்கு இட்டுச்செல்வதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் எச்சரித்துள்ளார்.

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஈராக்கில் நடைபெறவுள்ள தேர்தலை தமது தாக்குதல்கள் மூலம் குழப்ப தீவிரவாதிகள் முயற்சி செய்துவருகின்றார்கள். ஆனால், அவர்களைத் தோற்கடிப்பதற்கான சகல முயற்சிகளையும் அமெரிக்கா எடுக்குமெனவும் அவர் தெரிவித்தார்.






இதேவேளை - அமெரிக்கப் படையினருடனான சண்டையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் சமாதானத் தீர்வுத்திட்டம் ஒன்றை விரைவில் சதார் முன்வைக்கவுள்ளதாக சதாரின் உதவியாளரான ஹசன் அல்-அதாரி, அல்ஜசீரா தொலைக்காட்சிக்கு நேற்றுத் தெரிவித்தார்.

இவ்வாறு முன்வைக்கப்படும் இந்தத் தீர்வுத்திட்டம் ஈராக்கில் சமாதானத்தை ஏற்படுத்துமெனத் தெரிவித்த அவர், அடுத்த வருடம் ஈராக்கில் தேர்தல் நடத்தப்படும்போது, வன்செயல்கள் நடைபெற்ற பகுதியில் வாக்களிப்பு நடத்தப்படமாட்டாதென்ற சிலரின் கருத்தை முறியடிக்கும் எனவும் தெரிவித்தார்.

# அல்கொய்டா முக்கிய தலைவர் பாகிஸ்தானில் சுட்டுக் கொலை!



பாகிஸ்தானின் தென்பகுதியில் நடந்த சண்டையில் அல்கெய்டா அமைப்பின் முக்கிய தலைவர் ஒருவர் உட்பட மூவரை படையினர் சுட்டுக் கொன்றுள்ளதாக பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.

இவர் மீதான தாக்குதல் பாகிஸ்தானின் நவாப்சா மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கொல்லப்பட்டவர் அல்கொய்டா அமைப்பின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அம்ஜாட் பரூக் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரைக் கொன்றதன் மூலம் பயங்கரவாதிகளின் மிகப்பெரிய அத்திவாரமொன்றை தாம் அழித்துள்ளதாகவும் முஷாரப் தெரிவித்தார்.

கொல்லப்பட்டவர் ஜனாதிபதி முஷாரப் மீதான தாக்குதலை நடத்தியவரெனவும், அத்துடன் அமெரிக்கச் செய்தியாளரான டானியல் பெரலை கொலை செய்தவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இஸ்லாமியத் தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் பலரை சிந்தா மாகாணத்தில் வைத்து நேற்று தாம் கைதுசெய்துள்ளதாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியான பிரிகேடியர் ஜாவிட் சீமா தெரிவித்தார்.

பாரூக் கொல்லப்பட்ட இடத்திலிருந்து இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் மூன்று பாகிஸ்தான் பிரஜைகளும் கைதுசெய்யப்பட்டதாக பாகிஸ்தானின் உள்துறை அமைச்சர் அப்ரப் அகமட்கான் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட இந்த மூவரும் பாகிஸ்தானில் பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும், எனினும் இவர்கள் யாரென இதுவரை அடையாளம் காணப்படவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

நவாப்சா மாநிலத்தில் கொல்லப்பட்ட பாரூக் வசித்த வீட்டை படையினர் முற்றுகையிட்டவேளை, அவர் பெண் ஒருவரையும் சிறுவன் ஒருவனையும் மனிதக்கேடயமாக பிடித்து




வைத்திருந்ததாகவும், தன்னைக் கைதுசெய்ய முயற்சித்தால் அவர்கள் இருவரையும் கொலை செய்துவிடுவேன் என எச்சரித்ததாகவும் வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

கொல்லப்பட்ட பாரூக் தொடர்பான தகவலைத் தருபவருக்கு 3 லட்சத்து முப்பதாயிரம் அமெரிக்க டொலர் சன்மானமாக அறிவிக்கப்பட்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# ஹமாஸ் அமைப்பு முக்கிய உறுப்பினர் சிரியத் தலைநகரில் கொல்லப்பட்டார்!



சிரியாவின் தலைநகர் டமஸ்கஸ்ஸில் வைத்து ஹமாஸ் அமைப்பின் முக்கிய உறுப்பினர் ஒருவர் நேற்றுமுன்தினம் குண்டுத் தாக்குதல மூலம் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர் டமஸ்கஸ்ஸைத் தளமாகக் கொண்ட இசல் - டீன் ஷேக் காலில் (வயது 39) எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் இஸ்ரேல் படையினர் ஈடுபட்டதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அதிகாரிகள் பி.பி.சிக்குத் தெரிவித்தனர்.

அத்துடன் ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்கள் எங்கிருந்தாலும் கொல்லப்படுவர் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

1990 ஆம் ஆண்டு இஸ்ரேலினால் லெபனானுக்கு நாடு கடத்தப்பட்ட 400 பலஸ்தீன ஆயுததாரிகளில் கொல்லப்பட்ட இசல் - டீன் ஷேக் காலிலும் அடங்கியிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலில் தனது காரின் அருகே நின்று கையடக்கத் தொலைபேசி மூலம் உரையாடிக்கொண்டிருந்த வேளை அவரது கார் வெடித்துச் சிதறியதாகவும், அவ்வேளை அவர் கொல்லப்பட்டதுடன் மற்றும் மூவர் காயமடைந்ததாகவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

பலஸ்தீன ஆயுதக்குழுக்களுக்கு சிரியா ஆதரவு வழங்குமாக இருந்தால் இதுபோன்ற மிகப்பெரிய விலைகளைக் கொடுக்கவேண்டிவரும் என்ற செய்தியையே இந்தத் தாக்குல் மூலம் சிரியாவுக்கு இஸ்ரேல் தெரிவித்துள்ளதென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இஸ்ரேல் நடத்திய தாக்குதல் மூலம் அது மத்திய கிழக்குப் பகுதியில் ஸ்திரத்தன்மையற்ற நிலையை உருவாக்க முயற்சிப்பதாக சிரியா குற்றஞ்சாட்டியுள்ளது.



பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் சர்வதேச மோட்டார் கண்காட்சி நடைபெற்றது.

அதிபர் ஜக் சிராக் இந்தக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

கப்பல் போன்ற சொகுசு கார் முதல் முட்டை வடிவ குட்டிக் கார், 3 சக்கரக் கார், ஒரேயொரு இருக்கை மட்டுமுள்ள மினி கார்கள் வரை இதில் இடம்பெற்றுள்ளன.

இங்கே ஒற்றை இருக்கை காருக்குள் அழகி ஒருவர்.

# பின்லேடன் உயிருடன் உள்ளார்; பாகிஸ்தான் ஜனாதிபதி தெரிவிப்பு!



ஒசாமா பின்லேடன் இன்னும் உயிருடன் இருக்கிறார் என, பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் கூறினார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளிக்கையிலேயே முஷாரப் இவ்வாறு கூறினார்.

அந்தப் பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது -

முழு உலகமுமே தேடும் சர்வதேச பயங்கரவாதியான ஒசாமா பின்லேடனை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடிக்கவேண்டும் என்ற பிரச்சினை எழுந்துள்ளது. ஆனால் ஒசாமா பின்லேடனின் இருப்பிடம் எங்களுக்குத் தெரியவில்லை. அதனால் எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது.

பாகிஸ்தான் உளவு நிறுவனம் வெளிநாட்டு உளவு நிறுவனத்துடன் இணைந்து ஒசாமா பின்லேடனை வேட்டையாடும் பணியில் ஈடுபட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

அநேக மாணவர்களின் வேண்டுகோளிற்கிணங்க கீழ்வரும் பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் 26.09.2004 முதல் ஒவ்வொரு வாரமும் ஆரம்பமாகவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்!

மாணவர்கள், அலுவலர்களிற்கான வேறுபட்ட பிரிவுகள்!
வார, வார இறுதி, மாலை நேர, இரவு நேர வகுப்புகள்!
இலகு தமிழ் விளக்கங்களுடன் ஆழமான கற்பித்தல்!
அனைத்து மாணவர்களுக்கும் இலவச Floppy Diskket / CD Handouts
குறைவான கட்டணத்தில் நிறைவான அங்கீகாரம்



DIPLOMA COURSES
- Diploma in MS Office
- Diploma in Desktop Publishing
- Diploma in AutoCad
- Diploma in Hardware
- Diploma in Multimedia

Duration: 03 Months

Certificate Courses:
Excel, Access, Word, Java, C/C++, CorelDraw & Photoshop
அனைத்துப் பிரிவுகளிற்குமான அறிமுக வகுப்புக்கள்
எதிர்வரும் 29.09.2004 மாலை 4.00, 03.10.2004 காலை 10.00 ஆரம்பமாகின்றன.

eTouch COMPUTER SYSTEM
"The right way to touch IT"
உடுவில் வீதி, மருதனார்மடம், யாழ்ப்பாணம். தொ.பே. : 021-4590222

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பல்கலைக்கழக மாணவனை விடுவிக்குமாறு கோரிக்கை!

## விவசாயபீட மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

ஈவினைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த யாழ் பல்கலைக்கழக விவசாயபீட மாணவனான ரட்ணலிங்கம் சுசீலன் என்பவர் மல்லாகம் நீதிமன்றில் சரணடைந்தார். அன்றிலிருந்து இவர் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப் பட்டுள்ளார்.

எனவே இந்த மாணவன் தனது கல்விச் செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொள்ளும் வகையில் இவரது விடுதலை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகள் விரைவான நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவேண்டுமென யாழ்.பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அந்த மாணவர் ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சில தனிப்பட்ட ரீதியிலான சந்தேகத்துக்கிடமான காரணத்தினாலேயே இவர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார். இவ்வாறு இவரைத் தடுத்து வைத்துள்ளதனால் இவரின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைவதுடன், எதிர்காலமும் கேள்விக்குறியாகியுள்ளது.

இவர் சிறந்த நல்லொழுக்கமுடையவர். ஆதாரபூர்வமற்ற இவ்வகையான தடுத்துவைத்தலால் மாணவன் மனோவியல ரீதியாக பாதிப்படையும் நிலை ஏற்படலாம்.

இவ்வாறான கைது மற்றும் தடுத்துவைப்புக்கள் ஏனைய யாழ் பல்கலைக்கழக மாணவர்களினதும் சீரான கல்விச் செயற்பாட்டைத் தொடர்வதில் குந்தகமாக அமையும்.

எனவே இந்த மாணவரின் விடுதலை தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர் விரைவான செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டுமென அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இணுவிலில் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியைச்சேர்ந்த சுந்தரத்தின் சடலம் வீதியில் கிடப்பதைப் படத்தில் காணலாம்.

# மன்னார் கடலில் கடற்புலிகள் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனராம்!

## கண்காணிப்புக்குழுவிடம் படைத்தரப்பு முறைப்பாடு

மன்னார் - இலுப்பைக்கடவை கடற்பரப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக படைத்தரப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

சுமார் 400 கடற்புலிகள் வரை இந்தப் பயிற்சியில் ஈடுபட்டிருந்ததாக படைத்தரப்புத் தெரிவித்துள்ளது.

இதேவேளை - கடந்த 22 ஆம் திகதி முல்லைத்தீவு கடற்பகுதியிலும் கடற்புலிகள் பயிற்சியில் ஈடுபட்டதாக கடற்படை கூறியுள்ளது. கடற்புலிகளின் ஆறு தாக்குதல் படகுகள் இந்தப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

# உயர் பாதுகாப்பு வலயத்தால் பயிற்செய்கை பாதிப்பு!

## உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

தமது விவசாயக்காணி அதி உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால், தமது அடிப்படை உரிமை மீறப்படுவதாகத் தெரிவித்து உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கொல்லன்கலட்டி பிரதேசத்தைச் சேர்ந்த எஸ்.தங்கவேலு இந்த மனுவைச் சமர்ப்பித்திருந்தார். பாதுகாப்பு அமைச்சர், யாழ் பிரதேச இராணுவ கட்டளை அதிகாரி, இராணுவத்தளபதி, சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தமது காணி அதிஉயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப் பட்டதால், வெற்றிலைச் செய்கை தடைப்பட்டுள்ளதால் மாதாந்தம் கிடைக்கப்பெற்ற 15 ஆயிரம் ரூபாவை இழக்கநேரிட்டுள்ளதாக இந்த மனுவில் சுட்டிக் காட்டியுள்ளார்.

தமது காணியில் பயிர்செய்கை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று மனுதாரர் நீதிமன்றத்தைக் கோரியுள்ளார்.

### நோர்வே..

நோர்வேத் தூதரகத்துக்கு முன்பாக மிகக்குறைந்த எண்ணிக்கையானோரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

### புலிகளின்...

சந்திபபுக்களை மேற்கொள்ளவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதலில் சுவிற்சர்லாந்து செல்லும் இந்தக் குழுவினர் பின்னர் சுவீடன், நோர்வே, டென்மார்க் போன்ற நாடுகளுக்கும் விஜயம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவர்களுடன் ஏற்கனவே ஐரோப்பா சென்றுள்ள விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் பாலகுமாரன், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் இணைந்து கொள்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

### தேசிய...

துவப்படுத்தும் கட்சி மற்றும் பொது அமைப்புக்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கான பங்களிப்பை வழங்குவதற்கும் சகவாழ்வு நோக்கிய பயணத்துக்குத் தேவையான ஒத்துழைப்புக்களையும் இதன்மூலம் பெற்றுக்கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - தேசிய ஆலோசனை சபையில் பங்கேற்குமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போன்ற கட்சிகள் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### வரதர் அணி..

மறித்து கதைகேட்பதுபோல் கேட்டுவிட்டுத் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கொல்லப்பட்டவரின் மார்பில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. அவரது உடல் சுன்னாகம் பொலிஸாரால் தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுப் பின்னர் மரணவிசாரணைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டது. (ப)

# வாழ்க்கைச் செலவு உயர்வைக் கண்டித்து ஐ.தே.க. போராட்டம் நடத்த முடிவு!

நாட்டில் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்வதை ஆட்சேபித்து நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க - அரசாங்கம் தனது தேர்தல் உறுதிமொழிகளில் இருந்து விலகிச் செல்வதாக குற்றம் சுமத்தினார்.

எனவே தாம் அரசாங்கத்துக்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை நேற்று கட்சியின் புனரமைப்புப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் விரிவான செயற்திட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நாளை கவன ஈர்ப்பு போராட்டம்!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி யாழ். நகரில் கவனஈர்ப்பு போராட்டம் ஒன்றை நாளை நடத்தவுள்ளது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் திருகோணமலையில் தாம் நடத்திய போராட்டத்துக்கு எந்தவிதமான தீர்வும் கிடைக்காத நிலையில் தமது நிரந்தர நியமனம் தொடர்பாக தாக்கல் செய்துள்ளதாகக் கூறப்படும் அமைச்சரவைப் பத்திரத்தை துரித கதியில் அங்கீகரிக்குமாறு கோரியே இவர்கள் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து வட - கிழக்கில் தொடர்ச்சியாகப் போராட்டங்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

யாழ்.நகரில் நடைபெறவுள்ள பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களின் போராட்டத்தில் கலந்துகொள்ள வட-கிழக்கில் உள்ள பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் இன்று யாழ்.குடாநாட்டுக்கு வருகைதரவுள்ளனர்.

இதேவேளை, அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் நாளை காலை 7 மணிக்கு யாழ் ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தில் ஒன்றுகூடுமாறு வட- கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

# மட்டக்களப்பில் கைதான ஐவர் தொடர்ந்தும் விளக்கமறியலில்

(மட்டக்களப்பு)

ஆயுதங்களுடன் கைதுசெய்யப்பட்டதாகக் கூறி மட்டக்களப்பு சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர் உட்பட ஐந்து சந்தேகநபர்களின் விளக்கமறியல் உத்தரவு மேலும் இரண்டு வார காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் ஜூலை மாதம் 8 ஆம் திகதி வாழைச்சேனையில் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களான பயஸ் ராஜேந்திரா (குலதீபராஜா) மற்றும் வடிவேல் (பிரசாத்).

கடந்த மே மாதம் 22 ஆம் திகதி மட்டக்களப்பு - கூழாவடியில் உளள வீட்டில் வைத்து ரி - 56 ரக துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினரான தேவநாயகம் சுதர்சன்,

கடந்த ஜூலை 6 ஆம் திகதி கிரானில் வைத்து கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்ட தேசவிரோதக் கும்பலைச் சேர்ந்தவர் எனக் கருதப்படும் நடராஜா சசிக்குமார் ஆகியோர் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதிவான் எம்.எச். எம்.அஜ்மீர் இவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.

அதேநேரம் கடந்த 30 ஆம் திகதி வெல்லாவெளி விசேட அதிரடிப்படை சோதனைச்சாவடியில் மருந்து மற்றும் கைக்குண்டுடன் கைதுசெய்யப்பட்ட லொறிச் சாரதியான அமரசிங்கம் சுதாகரன் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது இவரது விளக்கமறியலும் எதிர்வரும் 8 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

# இனப்பிரச்சினை...

சமூகத்திலுள்ள தரப்பினர் அனைவரும் நல்ல தீர்மானம் ஒன்று எடுக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. 1977 ஆம் ஆண்டு அபிவிருத்தித்திட்ட யோசனைகளை நடைமுறைப்படுத்தி இருந்தால் இன்றைய பிரச்சினைகள் வெடித்திருக்காது.

இடைக்கால யோசனை என்பது புதியதல்ல இதன் கட்டமைப்பு வேறுபட்டது. 1987 ஆம் ஆண்டு இவ்வாறாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முயற்சித்தபோது எதிர்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தன. இதே ஆண்டு மாகாணசபை ஊடாக தீர்வு ஒன்றைக் காணமுற்பட்டபோது இப்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இணங்கினார் என்பது அனைவரும் அறிந்ததே.

இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா கூறினார். ஆனால் ஜனாதிபதியின் பேச்சு தோல்வியில் முடிந்தது. ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பாக சிறப்புற நடவடிக்கைகளை முன்னெடுத்து சென்றார் ஆனால், தற்போது பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.அலுவலக அதிகாரிகள்...

இந்நிலையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் சென்று இவர்கள் முறையிடவே அவர் அங்கு சென்று பார்வையிடுமாறு அனுமதித்தார். அதனை அடுத்து அவர்களுடன் ஒரு பொலிஸாரையும் கூட அனுப்பியிருந்தார்.

மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் மேல்மாடிக்குச் சென்றபோது அங்கு குழுமியிருந்த சுமார் ஏழு, எட்டுப் பொலிஸார் இவர்களைத் தடுத்தனர். உள்ளே செல்லமுடியாது எனக்கூறி மனித உரிமை ஆணைக் குழு அதிகாரிகளை கெட்ட வார்த்தைகளால் திட்டினர்.

இதை அடுத்து சுமார் 35 இற்கும் மேற்பட்ட பொலிஸார் ஒன்றுகூடி - இவர்களைத் தடுத்தனர். எனினும் அவர்களை மீறிச் செல்ல மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் முற்பட்டபோது பெருமளவு பொலிஸார் ஒன்றுகூடி அதிகாரிகளைத் தாக்கியதுடன் இழுத்துச் சென்று வாசலுக்கு வெளியே தள்ளிவிட்டனர். இதனால் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் உட்காயங்களுக்குள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரிகளைத் தாக்கி பொலிஸார், வெளியே தள்ளிவிட்டபோது- மேல்மாடியில் நின்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பார்த்ததாகக் கூறப்படுகிறது. அவர் உடனே வந்து விசாரித்துக் கொண்டிருந்தபோது - பொலிஸ் நிலைய வாசலில் வேகமாக ட்ரக்வண்டி ஒன்று வந்து நின்றது.

அதில் ஒருவரைப் பொலிஸார் தூக்கி வீசியதாகவும், அவரைப் பொலிஸார் ஒருவர் அமத்திப் பிடித்துக்கொண்டிருக்க ட்ரக் வேகமாகச் சென்று மறைந்துவிட்டதாகவும் ருவான் சந்திரசேகர தெரிவித்தார்.

ட்ரக்கில் கொண்டு செல்லப்பட்டவர் அழும் சத்தம் கேட்டதாகவும், இது குறித்து தான் உதவிப் பொலிஸ் அத்தியட்சகரிடம் முறையிட்டபோதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் குறித்து வடமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வானகுரு விசாரணைகளை நடத்துவதற்காக நேற்று யாழ். பொலிஸ் நிலையத்துக்கு வந்திருந்தார். இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் ஆணைக்குழு, பொலிஸ் தலைமையகம், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமையகம் முதலியவற்றுக்கு முறையிடப்பட்டுள்ளது. (ப)

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்
மாணவர்கள் இலகுவாகப் புரிந்துகொள்வதற்கும், ஆசிரியர்களின் உதவியின்றியே விளங்கிக்கொள்ளக்கூடியவகையில் உருவாக்கப்பட்டுள்ளது.
"தமிழ் இலக்கண நூல்" வினாவிடை
ஆக்கம்:- திருமதி நா.சீதரன்
B.A (Hons) Dip.in.Edu
ஆசிரிய ஆலோசகர்
யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்டவர்.
பிரதிகள் கிடைக்கும் இடம்.
யாழ்ப்பாணம் - பூபாலசிங்கம் புத்தகசாலை.
K.K.S. ROAD யாழ்ப்பாணம் - ஸ்ரீலங்கா புத்தகசாலை.
(945)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.